[illegible]

Vl. No. 9 11 [illegible] 1928.

3L
[illegible], N28KN
M28.1.9.
188992

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8-MAY 1928
MADRAS

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு … … ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ளு மார்ச்சுமீ 1உ [No 9.

## பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | செய்யும் கருமமும் செயல் வகையும். | 161 |
| 2. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 162 |
| 3. | தமிழ்ப்பாடம். | 165 |
| 4. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 167 |
| 5. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 169 |
| 6. | வானசாஸ்திரம் | 173 |
| 7. | வாய்மையும் திருவள்ளுவரும் முத்தையர் | 174 |
| 8. | மலர்வனம், "மதுகரம்" | 176 |
| 9. | வர்த்தமானம் | 178 |

## கலா நிலயம்.

### செய்யும் கருமமும் செயல் வகையும்.

### VIII

18892

மிருகலம்கல்கும் மெய்வாழ்க்கை எய்துதற்கு அழகோடு உறவாடிப் பழகுதலொன்றே ஆதாரமா யமையுமென்றும், அவ்வழகு ஈசனே யமைத்த இயற்கையழகெனவும் மனிதனாற்செய்த செயற்கை யழகெனவும் இருவகையாய் உருப்பெற்றுத் தோன்றுமென்றும், பின்னதற்குக் கலைகளெனப் பெயரென்றும், கடவுளின் சிருஷ்டியழகோடு ஈடுபட்டுத் தன்னையே தனிப்பெரும் பொருளிற்குள் துறந் தெய்தக் கலையுணர்வே மேன்மேலும் வளர்கின்ற பயிற்சிக்கு ஏற்றதாகுமென்றும் இந்நாள்வரை நாம் எழுதிவந்த விஷயங்கள் யுக்திக்கும் தர்க்கத்திற்கும் இணங்கியதாயின் அதனின்று தொடர்ந்தெழும் கேள்விகளின்னு மொன்றிரண்டு இருக்கின்றன.

அழகின் பயிற்சிக்குரியது கலையெனின் அக்கலைகளுள் பயிற்சிக்கேற்றது பின்னும் எதுவென்று வினவுங்காலையில் காவியத்திற்கே முதலிடம் தரவேண்டி வருகின்றது. சங்கீதமாதிய முக்கியமான கலைகள் ஐந்தும் அழகினைத்தாம் ஆராதிக்கின்ற தன்மை வரையில் ஏற்றந்தாழ்வில்லை என்பது மெய்யேயாயினும், அவ்வழகின்பால் அடியார்களை ஆற்றுப்படுத்துகின்ற விரைவினில் ஒரு சிறிது வித்தியாசம் உடையனவாயிருக்கின்றன முற்றிலும் முதிர்ந்த உணர்ச்சியையே பற்றிக்கொள்ளும் பான்மைத்து இயற்கையழகு. இனி முதிரா மனததினும் படிப்படியாய்ப் பல பேதமுளதாகையால் அவரவர்க்குத் தக்கபடி வெவ்வேறு கலைகளும் வெவ்வேறு வகைகளில் உதவும். ஆனால், எதுவொன்று ஏற்பதற்கு எளியதோ, எதுவொன்று தன்னுளே பிறவற்றின் தன்மைகளையும் வித்தாய் அடக்கியுள்ளதோ, அதுவே பயிற்சிநலத்தைக்கருதுகின்றபோது முதல் வந்து நிற்பது முறை. ஐவர் ஆசிரியர் தாம் கற்ற கல்வியிலும் அறிவிலும் ஒரு திறத்தவராயிருக்கலாம். எனினும் பிறர்க்கு அதைப் போதிக்கும் வன்மையில் சிறிதளவு மாறுபடுவது இயல்பே. முதலாவது, போதனாசிரியனது பாஷை மாணாக்கனுக்கு விளங்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். இரண்டாவது, போதிக்கப்புகுவது சிறப்புவகையில் ஒரு தனி விஷயமானாலும் ஆசிரியனுக்குப் பொதுவாக மற்றெல்லா விஷயங்களும் தெரிந்திருந்தால்தான் சொல்கின்ற விஷயத்தைச் செம்மையாய்ச் சொல்லி உய்த்துணர வைக்க அவனால் இயலும். மூன்றாவது, ஆரம்பச் சிறுவர்க்குக் கற்பிக்குமொருவன் பேராசிரியனாயிருத்தல் இன்றியமையாதது.

இம்மூன்று குணங்களையும் நினைவில் வைத்து ஆராயுங்காலையில், அழகினைப் போதிக்கும் ஆசிரியர்களாகிய ஐங்கலைகளுள் காவியக்கலையே ஏற்றதெனத் தோன்றுகின்றது. ஒவ்வொரு கலைக்கும் தன்னை விளம்பரம் செய்துகொள்வதற்கென்று அமைந்த பாஷை வெவ்வேறு. இயற்கைக்குரிய பாஷை அதன் அமைப்பேயன்றி வேறொன்றில்லை. வரிகளும் நிறங்களும் கலந்து நம் காதிற்கு எட்டாவகைப் பேசுகின்றது சித்திரம். தன்னொலிக்குத் தானே பொருள் என்னும்படி அமைந்துளது, சங்கீதம் பயில்கின்ற பாஷை. நடனம் பேசுகின்ற பேச்

செல்லாம் அது அசைகின்ற அசைவினாலே உணர வேண்டியதாயிருக்கின்றது. உருவத்தால் உரைக்கின்றது சிற்பச் சிலை. இவையெலாம் நமக்குத் தாய்ப்பாஷை அல்ல. பிறந்தது முதல் ஒருபொருளைத் தெரிந்துகொள்ளவும் தெரிவிக்கவும் சொற்களால் பழகிவருகின்றோமாதலால், அச்சொற்கள் கொண்டே ஓதுகின்ற காவியக்கலை முதல் இலக்ஷணப்படி சிறந்ததாகின்றது.

மேலும், வர்ணமும் உருவும் ஒலியும் அசைவும், அவைதாமே எய்தற்கமைந்த பொருளல்ல. முன்வந்தியங்குமிவையாவும் பின்னின்றியக்குமொரு பொருளின் தத்துவ நினைவினைத் தொடர்பின் நலத்தினால் நம் கருத்தினுள் எழுப்பிவிட வகை தந்த சில குறிகளேயாம். குறிகளைக்கொண்டு குறித்தபொருளை எய்துதற்கு முன்னதாகப் பயிற்சிகள் ஓரளவு ஆதாரமாயிருந்தாலல்லாது இயலுமோ. சின்முத்திரை காட்டியதோடு சும்மா இருந்துவிட்டால் அதனின்று பொருளை உய்த்துணர வல்லவர் எத்தனைபேர். இலக்கியங்களோ, தாம் காட்டிய குறியையும் நெறியையும் யாமறிந்த பல சொற்களால் விளக்கித்தரும் உதவியும் உடனின்று புரிகின்றன.

இலக்கியத்தில், இசையின் ஓசையும், நடனத்தின் அசைவும், சிற்பத்தின் உருவமும், சித்திரம் காட்டும் செய்தியும் யாவும் அடங்கியிருக்கின்றன. இவையன்றி இயற்கையின் வளப்பமுமே இலக்கியத்துள் காணலாகும்.

பஞ்சரங்கு தீயினாவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்க ணெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங்க லந்தபோது தையலாரை யுய்யவந் [மையோ
தஞ்சலஞ்ச லென்கிலாத வாண்மையென்ன வாண்

அர்த்தமே தெரியாதவிடத்திலும் இச் செய்யுள் தனது ஓசைநலத்தினாலேயே செவிவழிக் கருத்தும் கவரவல்லதென்பதற்கு ஐயம் உடையார் ஐயமேயுடையார்.

விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
மின்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன்
கதிர்வேல் பாடும் மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம்
வடிக்கண் ணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா
மென்னுந் தன்மைத் தண்ணுமையே.

என்று பாடியபோது முழவொலி செவியூடு கேட்கவில்லையோ! நடிப்பாளும் ஒருத்தி இனிக் கண்ணாற் காணவும்வேண்டுமோ! மற்றதற்கு முதாரணம்உரைக்கிற் பெருகுமென்று அஞ்சி இங்கு நாம் விடுவதை இலக்கியங்களுள் எங்கும் காணலாம். உளிக்கு உளியாயும் ஒலிக்குஒலியாயும் வண்ணக்கோலாயும் நுடங்குமுறுப்பாயும் கவிவாணர்க்குச் சொல்லெனும் ஒன்றே கருவியாய் அமைந்து கலைபிறவல்லார் தொழிலையும் கற்பிக்கின்ற நலத்தினாலே அழகின் வகையனைத்தும் அளாவிய பெருமை காவியம் பெற்றிருக்க ஆசிரியச்சிறப்பு அதற்கு மிகுதியுண்டென்று இயம்புதற் கமையும்.

ஆகலினால், கல்வியின் ஈங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை என்பதன் கருத்தைக் கண்ணுடையரென்போர் கற்றோர் என்னும் வாக்கினுடன் சேர்த்து அவைதம் பொருள்போமளவு உள்ளவாறு உணர்ந்துளதெனும் துணிபினோடு வெளிவந்து தோன்றிய நம் கலாநிலயம் மேற்கொண்ட கருமமோ இலக்கிய உணர்வும் சுவையும் யாவரும் எய்துமாறு முயல்வதன்றி வேறில்லை. ஏற்ற காரியம் எத்துணை பெரியதென்று அறிவோம். அது முற்றுப்பெறுவது ஒருவரால் ஒருநாளில் ஆவதொன்றன்று. எனினும், இத்தகைய காரியம் இடையூறின்றி நடைபெறுமோ என்னும் சிந்தனை எமக்கேன்? முயற்சியினளவே எம் செயல்; முற்றுப் பெறுவதற்கும் பெறாததற்கும் முழுமுதலாளியோ மற்றொருவன் இருக்கின்றான். திருவுளத்தின் கருத்து யாமறியோம். யாமறிந்ததெல்லாம் எம் கடமையை ஆற்றவேண்டுமென்பது ஒன்றே. பெரியரல்லாவிடினும் நாம், 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்னும் வள்ளுவரின் திருவாக்கு அளவிறந்த ஊக்கம் எமக்கு அளித்துநிற்கின்றது செய்வதற்கு அருமையானவைகளைச் செய்து முடித்த பின்னரே அச்செயலுக்குப் பெருமையுண்டு என்று அவர் சாற்றவில்லையே. ஆயின், செய்தார் என்றிருத்தல் வேண்டும்.

எண்ணில், இன்னுமொன்றுளது. யாமிபற்றும் இக்கருமம் முற்றிலும் நிஷ்காம்யகர்மமும் அன்றென்று வெள்ளையாய்க் கூறிவிடுதல் நலம். காவியத்தினின்பம் நுகர்ந்துளேம். யாம் இன்புறும் இது உலகும் இன்புறக் காணவேண்டுமென்று காமுறுகின்றபடியினால் எம் கருமம் நிஷ்காம்யமென்று மதிப்பதெங்ஙனம்!

### காந்திமதி என்னும்

## காந்தாரநாட்டுக் கட்டழகி.

(145-வது பக்கத் தொடர்ச்சி)

### 7. முயலும் சிங்கமும்.

காலம் சிலகழியச் சித்ராங்கனுக்குச் சென்று இச்செய்தியை உணர்த்தினர். 'அந்தோ, மாலினி' என ஆற்றாது அரற்றினான். தன்னயலகலாது தேற்றிவந்த சிற்றப்பன் சூழ்ச்சியினால் இது முடிந்ததென்று ஒருவாறு உன்னினும் தன்தந்தை விதித்ததற்கு விலக மனம் பெற்றிலனாகி முடிவில்; தன் உயிரையும் வெறுத்து வாழ்க்கையும் சலித்து இவனும் "ஏது செய்யினும் செய்யுங்கள்," என்றதந்தை போன்றே கைசோர்ந்தனன். மனமுடன் செல்லா மணமும் முடிந்தது. -மந்தாகினியை அவன் விவாக தினத்திற்கு முன்னும் பார்த்ததில்லை; பின்னும் பார்க்கவில்லை. மறுநாளே தனக்கென்று தனியாயமைந்த 'சித்ரமோகன' மாளிகைக்குத் தன் மனைவியென்ற பேர் கொண்டவளை அனுப்பிவிட்டு அந்தத் திசையையும் நோக்காது இளவரசன் இருந்து



விட்டான். மாலினியின் நினைவை வலித்தகற்ற முயன்ற அவன் மனம் உடையாது என்னசெய்யும். ஆயினும் நெகிழ்ந்துடைந்த புரைதோறும் அன்னாளழகிய முகமே காணலாயினான். எனவே, ஆடலிலும் பாடலிலும் உல்லாசச்சரசிகளின் அவலச் சகவாசத்திலும், அவனிழந்துவிட்ட அரியதோர் காதலின் நினைவை ஆழ அமுக்கிவிடுவதற் கெண்ணியே சித்ராங்கன் விளையாட்டயருங் களிமகனும் பொறுப்பற்ற புதல்வனுமாகியே மாற நேர்ந்தது. மாலினியினது உருவும் ஒவ்வொருபோது இவ்விளையோன் முன்னர் வெளித் தோன்றுவதுண்டு. ஆனால் தோன்றியபோதெல்லாம் அத்திருவுருவம் சினந்தேனும் நைந்து கரைந்தேனும் நோக்கியதாதலால் எதிர்நோக்கக் கூசிக்கூசி யச்சித்ராங்கன் தலைகுனிந்தே நின்றுநின்று காலவளவில் அவனது முகமிருந்த சாயலும் மனமகன்று மறந்துவிடக் கற்றவனும் ஆயினான். இது முன் நிகழ்ந்தவண்ணம்.

இந்த இராதி தினத்தன்று, தனமித்திரர் கருணாகரர் கலாநாதன் தனஞ்சயனுள்படச் சந்திரசேகரரிடம் சென்று 'சிகரவிலாஸத்தில்' தங்கள் குறையை முறையிட, அன்னவர்களுடனே இரத்தினபுரி வந்தடைந்த அவர் மன்னவனைத் தரிசித்துச் சிலபேசி யகன்றனர். அந்நாளே பிற்பகலில் சாவகாசமாய் விச்வகேசரியரசனும் அகிலாண்டேச்வர ஆசார்ய சுவாமிகளும் இரத்தினபுரி மடத்தின்கண் மதசம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்துவர அதனை முடிவிற்குக் கொணர்பவனாய்,

"நல்லது, சுவாமிகாள், இராஜ்யபார மதஸ்தாபன விஷயங்களை இதனுடன் நிறுத்துவோம். நமது நகரவாசிகள் இராதிதினக் கொண்டாட்டங்களை இன்றுகாலை எவ்வாறு நடத்தினர்? விநோத விளையாட்டிலும் தோய்ந்தெழுந்த உவகையிலும் சிறந்தனவோ?" என அரசன் கேட்டான்.

அதற்கு மடாதிபதி, "விநோத விளையாட்டுக்களைப் பற்றி அரசே, யானறிந்தது அற்பமே. ஆனால், தோய்ந்ததொன்றும் காண்கிலேன். எல்லாம் கடைந்ததாகவே தோன்றின. ஏனெனில், இருளகலா முன்னமே ஊரார் கொலைகொண்டு வெருட்டப் படுகாயப்பட்டு நம் மடத்திற்குள் வந்து அடைக்கலம் இருவர் புகுந்தனர். அக்காலம் நுந்தம் நித்திரைக்குப் பங்கம் விளைந்திருக்குமெனப் பயந்தேன்!" என்றனர்.

"சுவாமிகாள், பயமென்ன! என்னனைய புன்விதிப் பார்த்திபற்கு வலியோன்கழறும் வஞ்சினமும் எளியோர் குழறும் கூக்குரலும் இருசெவிக்குமெட்டாது தூங்குமிடம் விறகிலிட்ட தீ மூண்டபின்னேதானன்றோ!" என்று இரங்கி வருந்திய மன்னவனுக் கெதிரில் விராடபத்ரன் விரைந்துவந்து வணங்கி எழுந்தான். வந்த தம்பியை அரசனும் தழுவியெடுத்து, "விராடா, என் பாதந்தனை நீ தொழுதல் தகாது. ஒரு தாய்வயிற்றில் பிறந்தவரல்லரோ நாம்......நீ, இந்நகர் வந்ததேது?"

"உடன்பிறந்த உரிமையினால் எனதிறைவன் நீயென்ற நினைவுதன்னை மடமையுற மறப்பதுவும் என்றனக்கு ஏற்குமோ சொல்! வேந்தர்வேந்தே!"

"விராடா, வாஸ்தவம். புத்திர மித்திர சகோதர வார்சல்யம் வேர்விட்டு ஊன்றுவதற்கு ஒண்ணாக் கற்பாறைக்கு நிகரேயாம் இச்சிம்மாசனம். அண்ணல் சித்ராங்கனும் எனக்கு அண்மியனல்லனே. அவனை அன்போடு வளர்க்கும் உரிமையும் இழந்தனேனன்றோ!"

"அரசே, வரம்பிற் கடங்கா நம்சித்ராங்கனின் செயல்கள், அன்புகாட்ட வளருமோ மற்று அடக்கி வைக்கக் குறையுமோ, உய்த்துணர்ந்து இளவரசிற்கும் அவனாளிருக்கும் இந்நாட்டிற்கும் ஆவன செய். யான் தடுத்த குறைவேண்டா."

"தர்ம சங்கடமான இந்நிலையில், விராடா, என்னைத் தனிவழி யனுப்பிவிட்டு நீ துணைவர மாட்டேனென்பது நன்றோ! பாவம்! அவனுக்குப் பரிந்துபேசத் தாயுமில்லையே! அவனோ, விடைப் பருவத்தன், நன்மனத்தன்,........"

அரசன் பேசியதை முடிப்பதற்குள் மேன்மாடியில் வைகிய இவர்களுக்கு முற்றத்தின்கண் குதிரைவீரர் குழுமிய அரவம் கேட்டது. வேந்தனுந் திகைத்துநோக்கினன். விராடபத்ரன் கையமர்த்தி, "அண்ணா, தலைநகரம் விட்டு விரைவுடன் உனதிடம் வந்த என்காரியத்தை வினவாது தனையனை நினைத்துப் பரியலாயினாய்........ அக்கொடியோன் காஷ்மீரன் படைத்திரட்சி முடிந்ததென்றும் இனித் திங்களொன்றில் நம் நாடுகருதி நடந்தும் விடுவனென்றும் ஒற்றர் மூலம் அறிந்தேன். உடனே கஜேந்த்ரஸிம்மனுக்கும் சித்ராங்கனுக்கும் மணிவாளனுக்கும் இவ்விடம் அடைந்த நினது ஆணையைத் தாங்க ஆளனுப்பி யானும் கடிதில் வந்துளேன். அவர்களுள் யாராவதாகத்தான்கீழ்ப்புறம்வருபவர் இருக்கவேண்டும்," என்றனன். அதேசமயத்தில் சாளரத்தின் வழியாய் வெளி நிகழ்வது நோக்கி நின்ற மடாதிபதியும், "மன்னர் மணிவாளர் பரிவாரத்துடன் வருகிறார்," எனத் தெரிவித்தார். கேட்டவளவில் விராடபத்ரன் துணுக்கமுற்றுக் கையுதறிப் "பரிவாரத்தில் எத்தனைபேர்? உள்வாயில் நுழைகின்றனரோ!" எனக் கூறி, அரசனைப் பார்த்து, "அண்ணா, கலங்க வேண்டா. நின் மெய்க்காப்பாளர் நூறுவீரரை யுத்தஆயத்தராய் அமைத்திருக்கின்றேன்," என்றுரைத்து விச்வகேசரியைத் தேற்றுமளவில், மடாதிபதி மீண்டும், "இதென்ன!......பூமகள்......பாண்மகள்......ஒருத்தி......யாழிசை கூட்டுகின்றாள். கூத்தியரும்மடத்துள் புகுவதோ. இவளைத்துரத்துவதற்கில்லையோ அங்கெவரும்!" எனத்திகைக்க, அரசன், "பாவம், அவளால் தீது ஏது. பிரபுக்களைத் தொடர்ந்துவரும் போர்வீரர்களுக்கு அவள் பாடிக்கொண்டிருக்கட்டுமே......" என்னும்போது, மணிவாளன் முன்வந்துதொழுது நின்றான். அரசனுமவனைப்பரிவுடன்நோக்கி "மணிவாளா, நுந்தமைக் காணப் பெரிதும் உவகையனாயினேன். வெகுகாலமாய் எம்சபைதனுக்கேக நீர் மறந்தது ஏனோ" என்றியம்பி நல்வரவு கூறினன்.

"அரசர்தம் பெரும, கருமம்யான் செய்வதொன்று உளதாயின் சிறிதும் தாழாது நும்மவையின்கண் அடியேனைக் காணலாம். காஷ்மீரனைக் கடிவதற்குரிய போர்ப்பிரயத்தினம் செய்ய என்னை ஒரு பொருளாக மதித்து அழைத்தனுப்பாவிடினும்—(விச்வகேசரி தன் தம்பியை வினவுவான்போல் நோக்க அவனும் அரசனிருந்த இடம் தவிர மற்றெல்லாத் திசைகளையும் நோக்கினான்)—செயல்கருதி நானாகச்சேரவில்லையா! மந்திரக்கிழவர் உம் தம்பியும் தந்திரக்கிழவர் கஜேந்த்ரஸிம்மனும் இருக்க யான் பயனற்ற பதராயினேன். எனினும், என் நாட்டையும் கோட்டையும் கடந்தே பகைவன் காந்தாரத்துள் புகக்கூடு மாகையால் எனக்குப் படைப்பலம் தந்து அவன் வராமற்காக்கப் பணித்தருள்வீரேல், யான் இத்தருணமே மீண்டு சென்று போர்க்கோலம் கொண்டுமக்கு உதவியாவேன்!"

கபடனாகிய விராடபத்ரனுக்கு யாரிடத்தில்தான் நம்பிக்கை யிருக்கும். மணிவாளன் காஷ்மீரத் தாசனுடன் சேர்ந்து விடுவானோ என அஞ்சினான். ஆதலால் இச்சமயம் தன்கண்விட்டு இவன் அகலாதிருப்பதே நலம்என விராடபத்ரனுக்குத் தோன்றியது. எனவே, மணிவாளன் வேண்டியவாறு விச்வகேசரி பணித்திடுவதன்முன் விராடபத்ரன், "அண்ணா, இரத்தினபுரி வந்ததன்பின் எனக்கு இன்னுமோர் வதந்தி யெட்டியுளது. பெருஞ்

குன்றத் தலைவர்களுள் பெரியதோர் புரட்சி புகுந்திருக்கின்றதாம். இருப்பினும் தம்முள் பகைதீர்ந்து ஒன்று சேர்ந்து நமதூர்களை யெல்லாம் அலைத்துப் பறிக்கக் கூடவுங்கூடும் என்று வேவினாலுணர்கிறேன். இஃது உண்மையாயின் பெருங்குன்றத்தவரைத் தடிந்தடக்க மணிவாளமன்னரிற் சிறந்தோர் வேறில்லை. இவ்வுண்மை தெரியவருகின்ற வரையில் அவர் இங்குத் தாழ்தலே நலம் அல்லவா?" என்று தன் கருத்தைச் சொல்பவன்போல் அரசன் செய்யவேண்டியது இதுவெனக் காட்டினான். தன்னூடு மீளாது தடுப்பதற்கான சூழ்ச்சிதான் இது என்றுணர்ந்த மணிவாளன், "என் போன்ற அரசவிச்வாசமுள்ள ஒருவன் ஐந்தாறு ஆட்களுடன் வருவதற்கஞ்சியே மெய்க்காப்பாளர்களை வில்லும்வேலும் வாளுமாய்க் காந்து வைத்திருந்த உமது உத்தமத்தம்பி விராடர் அருகிருக்க, வேந்தே அப்பெரும் குன்றக் குறும்பர் யாது செய்ய இயலும்,'' என வஞ்சமாய்ப் புகழ விராடபத்ரன் சினங்கொண்டு எதிர்மாற்றம் தேடிச் சிறிது தாழ்ந்த சமயத்தில், கீழ்வந்த பாண்மகள் யாழிளந்தளித்த இசையெனும் இன்னமிழ்து இவர் செவியகம் தவழ்ந்தது. தனதிளையோனுக்கும் மணிவாளனுக்கும் இகலுரை பெருகாவண்ணம் தடுக்கக் கருதிய வரசன், "மணிவாள மன்னா, இசைச்சுவை மதிக்கும் செவ்வி நுமதிடம் உளதறிவேன். இப்பலகணியருகுசென்று பாடுவாள் திறத்தை யாய்ந்து அவள்தனக் கேற்ற பரிசு எதுவெனத் தேர்ந்து செப்புவீர்" எனப் பணித்தனன்.

மணிவாளனும் புன்னகை விளங்கத் தனதடர்ந்த புருவத்தைக் கூட்டித் தலைவணங்கிச் சாளரத்தையடுத்து அங்கு நின்ற மடாதிபதிக்கருகிடம் சேர்ந்தான். சேர்ந்தானெனினும் அவன்கருத்துப் பாட்டிலேனும் பாடுகின்றவளிடத்திலேனும் செல்லவில்லை. தன்பால் வாய்மைபொய்த்தும் தனது அரும்பெறற்செல்வி மாலினியின் வாழ்நாளைப் பாழாக்கியும் தன்னைப் பரிபவப்படுத்திய இவ்விச்வகேசரியை யாது செய்தாலென், என ஒருபுறம் எண்ணினான். இத்துணைக்கும் காரணமாய அக்கள்ளத் தம்பியின் தலை துணித்தலன்றோ தருமம் என மறுபுறம் சிந்தித்தான். "காஷ்மீரத்துடன் சேர நான் நேர்வனோ எனப்பயந்தே இக்கபடதந்திரி என்னை இங்கு நிறுத்திக்கொள்ளப் பார்க்கிறான்...ஆம்...ஏன்......இந்தச் சூத்திரப்பாவையாம் வேந்தைத் துறந்து காஷ்மீரனுக்கு ஆளானால் பலனில்லையோ, பழிதானுண்டோ!......எனினும்......எனினும்......மன்னவன் நல்லவன்......சயபுத்திபையாளும் வலிமைதான் இல்லையேயன்றித் தன்மனத்தால் எனக்குத் தீங்கிழைக்க இசைந்திலன். ஆதலால் யானவனைக் கைவிடுதல் நீதியாகாது, ஆனால்......ஆனால்......" என மணிவாளன் மனத்திடையே முடுகிப்புகுந்த எண்ணங்கள் சிறிது சோர்ந்திருக்கக் கீழிடைபாடிய பாண்மகள் தனது பாட்டை வீரச்சுவையின்று சோகச் சுவைக்கு மாற்றுவது ஆயினள். தானறியாமலே அவ்வின்னிசைக்கு வயப்பட்டு மணிவாளன் அவளை நோக்கினவண்ணமாய்ச் சிறிதுநேரம் நின்றிட்டான். பாடலும் அடங்கியது. பிறகு கீழ்ப்புறமே உற்று நோக்கினான். நோக்கிச் சிரித்த முகத்தினனாய் அவ்விடம் விட்டகலாது அரசனைத் திரும்பிப்பார்த்தான். அரசனும் தடுத்த சண்டை மறுபடி தொடங்க இடந்தாமல் தாமதமின்றி, "இப்பாடலைப்பற்றி, மணிவாள, நும் கருத்தென்ன! இவ்விடம் எட்டிய இரண்டொரு ஒலியே எனக்குப் புதியதோர் கிளர்ச்சியைத் தந்தது!" என வினவியகாலை, மணிவாளன், "அரசர் பெருமானே, யான் இசையிலக்கணம் வல்லுனனல்லன். மற்று, அப்பாண்குலச் சிறுமியும் நும்பால் பரிசிலொன்றும் எதிர்பார்த்தவளு மல்லளெனக் காண்கின்றது. காந்தார நாட்டின்கண் சிங்காரரஸப்பிரியர் சித்ராங்க இளவரசர் தன்னையே பாண்மகளுக்குத் தக்க பரிசிலாயளித்து நிற்கின்றார்." என்று சினத்துடன் சிரிப்பும் சேர்த்துச் செப்பினான். இது கேட்ட வேந்தனும் தன்மகன் கீழ்வந்திருத்தனனோ எனவினவ மணிவாளன், "ஆம், குதிரைமீதமர்ந்து பாணச்செல்வியுடன் சரசம் சில செய்துகொண்டிருக்கின்றார்," என உரைத்தனன். அரசனோ ஆற்றானாகி மடாதிபதியையும் "அஃது உண்மையேதானோ," எனப் பேதுற்று வினவினன். மடாதிபதியும் சாளரத்தூடே தன் நோக்கெறிந்து, "காணவொண்ணாக் கருமங்கள் எம்மடத்தின் நடைபெறுகின்றன. அரசே, தாம்கேட்க வருந்துவதை யான் சொல்லவும் இசையேன்," எனப் பலகணிவழியே பார்த்தலும் ஒழித்தனர். மணிவாளன் மாத்திரம் கீழ்க்கடப்பதைக் கருதி நோக்கியேயிருந்து, "அரசிளங்குமா, இதுவன்றோ அழகு!...ஓகோகோ! எம்மிறைவ, தாளுண்ட நீரைத் தலையால் தரும் தென்னையென நன்றியிற் சிறந்த நும் காண்முளை காதாலருந்திய இன்பத்திற்குக் கைமாறாக அப்பாத்தைக்கு வாய்வழி முத்தமேயா யளிக்கின்றார்......அரசே வந்திருக்கின்றார் கஜேந்த்ரஸிம்ம மன்னரும்!......அவருக்குக் கண்கொள்ளா காட்சியிது! சாதம்!......" எனவிட்டு விட்டுச் சொல்லிக்கொண்டு வந்தான். அதைக் கேட்கக்கேட்க அனல்படு சருகெனச் சுருண்ட மன்னவன், "என்ன வென்ன விது! காந்தார நாட்டிளவரசன் பாணத்தியுடனேயோ விளையாடியிருக்கின்றான்......அதுவும் மாதுலன் முன்னிலையிலா!...சுவாமிகாள், தயைபுரிந்து என் மகனையிங்கு அழைத்து வருவீர்......எனதாருயிர்த்தம்பி, விராடா, நீயும் செல்" என இயம்ப அவ்விருவரும் அகன்றனர். பிறகு மணிவாளனையும் கூவிப், "பெருந்தகையுடையீர் நீவிரும் சென்று தீதிலாவகை என்மகனை இங்கு அழைத்துவர வேண்டுகின்றேன்......கஜேந்த்ரஸிம்மன் கடுங்கோவமுடையான்...சித்ராங்கனை எது செய்வனோ என ஏங்குகின்றதே என் னெஞ்சம்" என இரந்தனன்.

"கொற்றவா, கஜேந்த்ர ஸிம்மனுக்கும் அவனொரு மருகனுக்கும் வேறுபாடுண்டானால் அதைச் சந்துபட இசைக்க மாலினிக்குத் தந்தையாயினேன் பொருந்துமோதான்......!" எனப் பதிலுரைத்து மணிவாளன் அரசன தருகுவந்து சேர்ந்தான்.

"மணிவாள, நும்பால் யாமிழைத்துள அரிய பிழையைப் பொறுத்தி," என மன்னவன் மணிவாளனது காங்களைப்பரிவுடன் பற்றுதற்குஎண்ணி எழிற்திருக்கையில் கீழிருந்து கஜேந்த்ரஸிம்மன் உரப்பியகுரல் அவன் காதிற்படப்பரசுராமன் தெறித்தநாணின் ஒலிகேட்ட தயரதனைப்போல் மூர்ச்சையாகித் தரையிற் சாய்ந்தான். சாயுமளவில் அவன் தலைமுடி கழன்றுருண்டு மணிவாளனது காலிற்பட்டது. இதுகாண மணிவாளன் மனமிளகி மன்னவனை அன்பொடெடுத்துத் தெளிவிக்க அவனும் விரைவில் தன்னினைவு பெற்று," மணிவாளா, காப்போரின்றி நின்னுடன் தனியா யிருக்கின்றேனே......" என நடுங்கினான்.

"இருப்பினென்! என்னையாட்கொண்ட வரசே. நுமதடி தொழுகின்றேன். தனியிருப்பினும் என்பழி முடிப்பேனெனப் பதைக்கின்றீரோ. அத்தகைக் கீழ்மகனல்லன் யான்! என்னைப்பற்றிய பல பழிச்சொற்கள் தேவரீர் செவிக்குள் தூர்த்தர் சிலர் புகட்டியுளரேனும் அந்தத்திலுமக்கு உற்றதுணை யானேயாவேன், சாதமிது." எனப் பரிவுடன் கூறினனாய் வாய்மையேயாண்ட மணிவாளமன்னன், கீழிருந்த கிரீடத்தை எடுத்து அவனுக்குச் சூட்டினான்.



"யாரினும் உயரியோய், அவசமுற்ற யான் நின்னையவமதித் திழைத்துள தீமை கொடியதே......அன்னதற்குத் தகுந்த பரிகாரமும் நேர்வோம்."

"எம்பெரும, திருவுள மதுவாயின் அடியேற்குப் பரிகாரம் கிடைப்பதோ அரிது; மாலினியை மணங்கொள்ளத் தந்தமொழி முதலில் எனக்கேயன்றோ! மேலும், யானோ கஜேந்த்ரஸிம்மனோ நமக்குத் துணைப் பலத்திலும் அவசியமாயவன் என்பதூஉம் அமர்ந்தாய்வீர். காந்தாரநாட்டின் திறவுகோல் என்கையில் கிடக்கின்றது. என் கோட்டையால் காவேனாயின் காஷ்மீரனுக்கு இத்தேயம் இருவிரற்கிடை. கஜேந்த்ரஸிம்மன் படையிரட்டி வந்து தடுப்பதன்முன் பகைவனதுவெற்றிக் கொடி காந்தாரக் கொத்தளங்களில் பறந்துவிடுமே. இளவரசோ, பேதையென் புதல்விமீது பெருங்காதல் கொண்டுளன். மந்தாகினியிடம் சித்ராங்கன் வைத்துள கண்ணியம் எவ்வளவு என்பதும், அவன் தந்தையின் கண்ணெதிரிலேயே பாணச்சியுடன் அவன் லீலைகள்செய்வதிலிருந்து தேவரீர் தெரிந்துகொள்ளலாகும்."

மணிவாளன் முடிவில் எடுத்துக் காட்டியதினின்று அரசனுக்குத் தன் மைந்தன் அகப்பட்டிருந்த ஆபத்து நிலை மறுபடியும்நினைவிற்கு வந்தது. "மணிவாளா, இங்கு நாம் வார்த்தையாடுமளவில் அங்கு இரத்தம் பெருகுமே! கடிதிற் சென்று மாதுலன்கையில் என்மகன் கொலையுண்ணாது காவாயோ! பிறகல்லவோ நினதெண்ணம் நிறைவேறுதலும் கூடும்," என்றரசன் அவன் கைகளைப் பிடித்துக் கீழிடம் காட்டி விடுத்தனன்.

"மன்னவா, பணிந்து நாணிரப்பக் கருணையால் அளிக்கும் இம்மொழியை நீர் மறுமுறை மறக்காவண்ணம் கடவுளே காக்க!" என்ற மணிவாளற்கு வேந்தனும் "கடவுளை நம்பி நீ கொலையைத் தடுத்துவா," என உரைத்தலும் மணிவாளனும் அவ்விடம் விட்டு விரைந்தேகினான்.

T. N. சேஷாசலம்.

# தமிழ்ப் பாடம் 9.

## நள வெண்பா

(151-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்

27. இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காத
லற்றது மான மழிந்ததுநாண்—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான்வெங்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து. [காமத்

பதப்பிரிவு :— இற்றது நெஞ்சம் எழுந்தது இரும் காதல் அற்றது மானம் அழிந்தது நாண் மற்று இனி உன் வாய் உடையது என் உடைய வாழ்வு என்றான் வெம் காம தீ உடைய நெஞ்சு உடையான் தேர்ந்து.

அன்வயம் :— நெஞ்சம் இற்றது. இரும் காதல் எழுந்தது. மானம் அற்றது. நாண் அழிந்தது. (இவ்வித) வெம் காமதீஉடைய நெஞ்சு உடையான் (ஆனானன்) தேர்ந்து, '(அன்னமே) மற்று இனி என்னுடைய வாழ்வு உன் வாய் உடையது' என்றான்.

பதவுரை.

நெஞ்சம் - (நளனது) மனம்
இற்றது - உடைந்தது. (அதனின்று)
இரும் - பெரிய
காதல் - ஆசை (யெனும் நெருப்பு)
எழுந்தது - மூண்டெழுந்தது. (எழவே அவனது)
மானம் - மானமானது
அற்றது - ஒழிந்தது.
நாண் - வெட்கமும்
அழிந்தது - அழிந்துபோயிற்று. (எனவே அந்த)
வெம் - வெப்பமான
காமம் - காமமாகிய
தீ உடைய - நெருப்பை உடைய
நெஞ்சு - மனதை
உடையான் - உடையவனாகிய (நளன்),
தேர்ந்து - காரியம் ஆகும் விதம் இதுவே எனத் தெளிந்து, (அன்னத்தைப் பார்த்து)
மற்று இனி - இதன்மேல்
என்னுடைய - என்னுடைய
வாழ்வு - வாழ்வானது
உன் - உன்னுடைய
வாய் - வாயிலே
உடையது - இருக்கின்றது,
என்றான் - என்று கூறினான்.

கருத்து :—அன்னமே, என்னைத் தமயந்தி மணம் புரியும்படி அவளிடத்தில் நீபோய்ச் சொல்கின்ற சாமர்த்தியத்தில்தான், நான் இனி வாழ்வதும் ஒழிவதும் பொருந்தி யிருக்கின்றது.

விரிவுரை :—அன்னம் உரைத்த மொழிகளைக்கேட்ட நளனது மனத்தில், பூகம்பம்போல், ஒருபெரிய அசைவு உண்டாயிற்று. கம்பித்த நிலம் பிளப்பதுபோல அவன் மனமும் பிளந்து போயிற்றாம். பிளந்த நிலத்திலிருந்து எரிமலை எழுவதென உடைந்த அவன் மனதினின்று காமத்தீ கிளம்பியது. எழுகின்ற எரிமலை அந்நிலத்திலிருப்பனவற்றை அழித்து விடுவதுபோல் நளனது மனதிற்கு உரிய மானமும் வெட்கமும் அக்காமத்தால் அழிந்துபோயினவாம். இதனால்தான் எழுலகம் நின்ற கவிகை நிழல்வேந்தன், ஒரு அன்னதத்தைப் பார்த்து 'என் வாழ்வெல்லாம் இனி உன்வாயிலே இருக்கின்றது' என்று அதனைத் தாழ்ந்து வேண்டும்படி நேர்ந்தது.

இவன் வாழ்வு அன்னத்தின் வாயில் இருப்பது எப்படி எனில், தமயந்தியைப் பாராட்டித் தன்னிடத்தில் சொன்னதைப்போலவே வஞ்சனையின்றித் தன்னைப் பாராட்டி அவளிடமும் சொல்லவேண்டு மென்பதாம். அன்னம் பேசிய உரைகளால் அதற்குச் சொல்வன்மை மிகுதியும் உண்டு என உணர்ந்ததால் இப்படிச் செப்பினான், என்பதைக் காட்டவே கவி 'தேர்ந்து' என்ற சொல்லை அமைத்திருக்கின்றார்.

குறிப்பு :—1. உன் வாய் உடையது என்று கொள்ளாது, உன்வாய் உடையது என்றாலும் அர்த்தம் தரும். வாய், என்பது பேசுகின்ற வாய் என்னும் உறுப்பைக் குறிக்காது, இடத்தைக்காட்டி 'என்வாழ்வு உன்னிடத்தில் இருக்கின்றது', என்று அர்த்தமாகும். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் முதலில் சொன்ன அர்த்தமே சிறப்புடையது. முன் 4-வது செய்யுளில் (29-வது பக்கம்) காரிகையார் கண்ணே, என்றதில் இதற்கு மாறாகக் கண் என்றதை உறுப்பாக மாதருடைய கண்கள் என்று கொள்ளாமல் மாதர்களிடத்தில் என்று கொள்ளவேண்டும், எனச் சொல்லியிருப்பதை நினைத்துக்கொள்க.

2. இரும் காதல், என்ற தொடருக்கு மிகுந்த அல்லது பெரிய காதல் என்று அர்த்தம். இருமை+காதல்=

இருங் காதல். இருமை, என்றதற்கு மூன்று அர்த்தங்கள் இருக்கின்றன. அதை நன்ருக நினைவில் வைத்துக் கொள்வது நலம்...(1) இரண்டு, என்கிற அர்த்தம் யாருக்கும் தெரியும். இருகாதும் குளிரப் பேசினன், என்ற உபயோகத்தில் இது இரண்டு என்னும் கணக்கையே காட்டும். (2) கருமை:—இரும் குயில் கூவியது, என்றக்கால், கரிய நிறமுடைய குயில் என்ற பொருள் தரும். இரண்டு குயிலன்று, பெரிய குயிலுமன்று. (3) பெருமை:—இரு ஞாயிறு, என்ருல் இரண்டு சூரியன் அல்ல, கரிய சூரியனுமல்ல, பெரிய சூரியன். தேவர் அமிழ்து வேண்டி இரும் கடல் கடைந்தனர், என வருமானல், அவர் கடைந்தது வெண்மையான பாற்கடல் ஆதலால், இரும் என்பது இங்குக் கரிய என்ற அர்த்தத்தைக் குறிக்காமல் பெரிய அல்லது விசாலமான என்னும் அர்த்தத்தைக் குறிக்கும்.

28. வீமன் றிருமடந்தை மென்மாலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே
ஓடுங்கிடையா டன்பா லுயர்ந்து. [யன்னம்

பதப்பிரிவு:—வீமன் திரு மடந்தை மென் மாலை உன் உடைய வாம நெடும் புயத்தே வைகுவிப்பேன் சேம நெடும் குடையாய் என்று உரைத்து நீங்கியதே அன்னம் ஒடுங்கு இடையாள் தன்பால் உயர்ந்து.

அன்வயம்:— சேம நெடும் குடையாய் "வீமன் திரு மடந்தை மென்மாலை உன்னுடைய வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்" என்று அன்னம் உரைத்து உயர்ந்து, ஒடுங்கு இடையாள்தன்பால் நீங்கியது. [வாமம் - அழகு. சேமம் - க்ஷேமம், காவல்]

நீங்களே பதவுரை எழுதிப் பார்த்துப் பயின்று கொள்வதற்கு ஏற்றபடி சுலபமான பாட்டு இது. 'தமயந்தி உனக்கே மணமாலை சூட்டும்படி செய்கின்றேன்' என்று அன்னம் அரசனுக்குக்கூறி தமயந்தியினிடம் போயிற்று என்பது கருத்து.

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற்காணுங்கொ
லிவ்வளவிற் காத லியம்புங்கொ— லிவ்வளவின்
மீளுங்கொ லென்றுரையா விம்மினன் மும்மதநின்
ருளுங்கொல் யானை யரசு. 29

பதப்பிரிவு:—இவ் அளவில் செல்லும்கொல் இவ் அளவில் காணும்கொல் இவ் அளவில் காதல் இயம்பும் கொல் இவ் அளவில் மீளும் கொல் என்று உரையா விம்மினன் மு மதம் நின்று ஆளும் கொல் யானை அரசு.

அன்வயம்:—மும்மதம் நின்று கொல்யானை ஆளும் அரசு, 'இவ் அளவில் செல்லுங்கொல், இவ் அளவில் காணும்கொல், இவ் அளவில் காதல் இயம்பும்கொல், இவ் அளவில் மீளும்கொல், என்று உரையா விம்மினன்.

பதவுரை.

மு மதம் - மூன்று மதங்களும்
நின்று - தங்கியதாய்
கொல் - (கண்டவர்களை)கொல்கின்ற
யானை - யானைகளை
ஆளும் - (அடக்கி)ஆள்கின்ற
அரசு - அரசனாகிய நளன்,
இவ் அளவில் - இதற்குள்
செல்லும் கொல் - (அன்னமானது தமயந்தியினிடத்தில்)போயிருக்குமோ!
இவ் அளவில் - இதற்குள்
காணும்கொல் - (அவளைக்)கண்டிருக்குமோ !
இவ் அளவில் - இப்பொழுது
காதல் - எனது காதலை
இயம்பும்கொல் - (தமயந்திக்கு) சொல்லுமோ !
இவ் அளவில் - இப்பொழுது
மீளும் கொல் - திரும்புமோ !
என்று - என்று
உரையா - சொல்லி
விம்மினன் - தேம்பினன்.

கருத்து :— தமயந்தி உன்னை விவாகம் செய்துகொள்ளும்படி செய்கின்றேன் என்று சொல்லி அன்னம் போனது முதல், நளன் பொறுமை யற்றவனாய் நிமிஷம் நிமிஷமாக எண்ணிக் கணக்கிட்டு இன்னும் அது திரும்பவில்லையே என்று பன்னிப்பன்னி ஏங்கினன்.

விரிவுரை :— மதங்கொண்ட யானையையும் தன் தோள் வலியால் எளிதில் அடக்கி ஆளும் வல்லமையுடையவனாயிருந்தும்,தன்மனதைச் சிறிதுநேரம் அடக்கி வைக்க இவனால் இயலவில்லையே! காதலுற்றவர் பேதைமை பெரிது, எனச் சிரிப்பவர்போல் கவி, மும்மதம் நின்ருளும் கொல்யானை அரசு, என்று அவனை அழைக்கின்ருர்.

குறிப்பு:— 1. நாலாவது அடியில்வரும் கொல்யானை, என்ற தொடரிலுள்ள கொல் ஒன்றுதான் இந்தச் செய்யுளில் கொலை செய்கின்ற தொழிலைக் காட்டுகின்றது. மற்ற அடிகளில் வந்த செல்லுங்கொல் போன்ற சொற்களிலுள்ள கோல் என்பவை, ஓ என்பதிற்குப் பதிலாய் வினு (அல்லது கேள்வியை) குறிக்கின்றது. செல்லுமோ என்ருலும் செல்லுங்கொல் என்ருலும் ஒரே அர்த்தம் தான். நீ நாளை வருவாயோ, எனக் கேட்பதற்குப் பதிலாய் நீ நாளை வருவாய்கொல், என்றும் கேட்கலாம். என்கொல் இது, என்ருல், என்ன இது என்று கேட்பதற்குச் சமானம்.

2. உரையா விம்மினன், என்பதிலுள்ள உரையா, வினையெச்சம். (இந்த உருவத்தில் வருகின்ற சொற்களின் இலக்கணத்தை முன் 7-வது செய்யுளிற்கு அடியில், 50-வது பக்கத்தில் விரிவாகச் சொல்லியிருக்கின்றேன்). உரையா விம்மினன், என்ருல் உரைத்து விம்மினன், என்றும் கொள்ளலாம்; அல்லது உரையாமல் விம்மினன், என்றும் கொள்ளலாம். இந்த எதிர்மறைப் பொருளும் சந்தர்ப்பத்திற்கு இணங்கி இருக்கின்றது. அன்னம்போயிருக்குமோ, கண்டிருக்குமோ, காதலைச் சொல்லியிருக்குமோ, இவ்வளவில் மீண்டு வருமோ, என்று நினைத்து நினைத்து வாயாலொன்றும் சொல்லமாட்டாது விம்மிக் கொண்டிருந்தான் என்பது இயற்கையே.

சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யழிந்திட்டான்—பூவி
னிடையன்னஞ் செங்கா லிளவன்னஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து. 30

பதப்பிரிவு :—சேவல் குயில் பெடைக்கு பேசும் சிறு குரல் கேட்டு ஆவி உருகி அழிந்திட்டான்—பூவின் இடை அன்னம் செம்கால் இள அன்னம் சொன்ன நடை அன்னம் தன்பால் நயந்து.

அன்வயம் :—பூவின் இடை அன்னம் செம்கால் இள அன்னம் சொன்ன நடை அன்னம் தன்பால் நயந்து, சேவல் குயில் பெடைக்கு பேசும் சிறுகுரல் கேட்டு ஆவி உருகி அழிந்திட்டான்.

கருத்து:—அச்சோலையில் ஆண்குயில் தன் பெண் குயிலோடு மெல்லிய குரலால் பேசுவதைக்கேட்டு நளன், அன்னவாறே தனதருகு தமயந்தியில்லையே என்று பொருமைகொண்டு வாட்டமடைந்தான்.

பதவுரை.

பூவின் - தாமரைமலரின்
இடை - நடுவிலே (வசிக்கும்)



அன்னம் - அன்னப் பறவையானது
செம் - சிவந்த
கால் - கால்களையுடைய
அன்னம் - அந்த அன்னப்பறவையானது
சொன்ன - வருணித்த
நடை - நடையிலே
அன்னம்தன்பால் - அன்னம்போன்ற தமயந்தியினிடத்தில்
நயந்து - விருப்பம் மிகுந்து (நளன்)
சேவல் - ஆண்குயில்
குயில் பெடைக்கு - பெண் குயிலோடு
பேசும் - பேசின
சிறு - மெல்லிய
குரல் - குரலை
கேட்டு - காதிற் கேட்டு
ஆவி - (தனது) உயிர்
உருகி - கரைந்து
அழிந்திட்டான் - வாட்டமடைந்தான்.

விளக்கம் :—அழிந்திட்டான் - அழிந்தான் - வாட்டமெய்தினன். (பயனிலை). யார் அழிந்திட்டான்? நளன், தோன்ரு எழுவாய். எப்படி அழிந்திட்டான்? உருகி - கரைந்து. எது உருகி? ஆவி உருகி - உயிர் கரைந்து. என் ஆவி உருகி அழிந்தான்? கேட்டு - கேட்டதால். எதைக்கேட்டு? குரல் கேட்டு. எப்படிப்பட்ட குரல் கேட்டு? சிறு குரல் கேட்டு. எந்தச்சிறு குரல் கேட்டு? பேசும் சிறு குரல் கேட்டு. எது பேசும் சிறு குரல் கேட்டு ஆவி உருகி அழிந்திட்டான்? சேவல் - ஆண் பறவை. சேவல் எதனோடு பேசும் சிறு குரல்? குயில் பெடைக்கு - பெண் குயிலோடு. சேவல் குயில் பெடைக்குப் பேசினுல் அதைக்கேட்ட நளன் ஆவிகரைந்து அழிவானேன்? நயந்து - நயந்ததால் - விருப்பம் கொண்ட காரணத்தால். யார்பால்நயந்து? அன்னம்தன்பால் நயந்து- அன்னத்தைப் போன்ற தமயந்தியினிடத்தில் விருப்பம் கொண்டு. எதனில் அன்னத்தைப் போன்றவளிடத்தில் நயந்து? நடையன்னம் தன்பால் - நடையினில் அன்னம் போன்றவளிடத்தில். யார் இவள்? சொன்ன நடை அன்னம் - சொல்லிய நடை அன்னம். எது சொல்லிய நடை அன்னம்? அன்னம் சொன்ன நடை அன்னம் - அன்னப்பறவை சொல்லிய அன்னம் போன்ற நடையினள். சொன்ன அன்னம் எப்படிப்பட்டது? இள அன்னம். இன்னும் எப்படிப்பட்டது? செம்கால் இள அன்னம் - சிவந்த கால்களையுடைய இளமை பொருந்திய அன்னம். அன்னம் எங்கே வசிப்பது? பூவின் இடை அன்னம் - தாமரைப்பூவிற்கு நடுவிலே வசிக்கின்ற அன்னம்.

விரிவுரை: —உலகெலாம் காத்தளித்து உற்ற பகை அறவே அடக்கவல்லமன்னவன் குயிலொன்றுகூவக்கேட்டுப் பொருமை யடைந்தா னென்ருல் காமம் செய்கின்ற காரியம் எத்தகையது என்பது தெரியவருகின்றது. பின்வரும் மூன்று வெண்பாக்களும் நளனது இம் மனநிலையையே விளக்கிக் கூறுகின்றன. அச்செய்யுள்களை மாத்திரம் எழுதுவோம், உரை முதலியன பின்னொரு கால் பார்த்துக் கொள்ளலாம். பாடம்வரையில் அவசியமில்லை.

31. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயிற் றேகை விரித்தாட—முன்னதனைக்
கண்டாற்று துள்ளங் கலங்கினன் காமநோய்
கொண்டார்க்கிஃ தன்றே குணம்.

32. வாரணியுங் கொங்கை மடவா ணுடங்கிடைக்
பேருவமை யாகப் பிறந்துடையீர்—வாரீர் [குப்
கொடியா ரெனச்செங்கை கூப்பின னெஞ்சக்
துடியா னெடிதுயிராச் சோர்ந்து.

33. கொங்கையிள நீராற் குளிர்ந்தவிளஞ் சொற்
[கரும்பால்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தின்—மங்கை
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனே [நறுங்
வெய்தாமக் காம விடாய்.

நளன் இங்கு இவ்வாறு காமநோய் அடைந்து வருந்தியிருக்கத் தூதுசென்ற அன்னம் விதர்ப்ப நாடடைந்து தமயந்தியைக் கண்ட செய்தி அடுத்தபாட்டில் ஆரம்பமாகின்றது.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 148)

### தனிப் பாடல்கள்.

சேக்கிழாரது சிறப்பியல்பை உணர்வதெனின் மற்றையோரது கதையோடு இவர்கதையை ஒப்புநோக்குவதாய் முடிகின்றது. கண்ணப்பர் அன்பிற்கொரு பெரும் எடுத்துக்காட்டாக விளங்கியராதலினுல், அவரைப் பலரும் பலவகையாகப் புனைந்து பாடிப் போற்றி இருக்கின்ருர்கள். முதலில் அவரது கதை முழுதினையும் பாடாது, தமதுபாட்டின் நோக்கத்திற்கேற்பஅக்கதையின் நுணுக்கங்களில் சிலவற்றை மின்னிப் பொலியச்செய்து மேன்மைபெற்ற பாடல்களை ஆராய்வோம். ஒரு கதையினையே வெவ்வேறு சுவைக்குறிப்புத் தோன்றுமாறு பலரும் பலவாருகப் பாடிப்போவது வியக்கத்தக்கது.

திருமுறை :—கண்ணப்பர் கதைதான் என்ன? அதனைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஒரு பாட்டிலேயே தேனொழுகத் திருவருளால் பாடியுள்ளார், திருநாவுக்கரையர்

குவப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ் சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகணை இடந்தங் கப்ப
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னாரே.

என்ற இனிமை கெழுமிய திருநேரிசை, நமது அடிகள் தமது உள்ளுணர்வால் கண்டுகளித்த கண்ணப்பர் கதையினைத் தெளிவுறுத்துகின்றது. கண்ணப்பர் என்பார் பிறப்பில் வேடர். உடல் உரம் எல்லாம் ஒருருப்பெற்ற வடிவினர், திரண்டுருண்டு தடித்திருந்த தோள்கள் அவர் காட்டின்குழந்தை என்பதைச் சுட்டுகின்றன. அவர் வடிவிலும் பெரியர்; அதனுல் மிகமிகப் பெரிய செருப்பினை அணிய வேண்டியதாயிற்று. அவ

ரத்து வளைத்தது வளைத்தபடி இருத்தலில்லோ கொடுமையன்றி வேறொன்றும் அறியாதது. உண்ணும் உணவும் இறைச்சியே, பெற்றவர்! உடலுரம் பெற்றவர். உடலை வளர்ப்பதொன்றே நோக்காக உடையவர், அஞ்சா வன்னெஞ்சர். அத்தகையவர், அறிவுரம்பெற்று இறைவனே நோக்கமாக உடையவராய் அன்புருவாய் நெகிழ்ந்தமை என்ன வியப்பு. கடவுளை எவரும் வழிபடாத வழியில் வழிபட்டார். ஊத்தைவாய் நிறைய நீர் முகந்துவந்து இறைவன் திருமுடிமேல் திருமஞ்சனமாட்டுவதுடன் இறைவனார் திருமுடிமேல் இருந்தவற்றைச் செருப்படியால் அப்புறம்உதைத்துத் தள்ளுவது. இவ்வளவே அவர் வழிபாடு; ஆனால் இவ்வளவேயோ? ஒரு கையில் இறைச்சியும் ஒரு கையில் வில்லும் ஏந்தி வருவதால் கையில் கொண்டுவர இயலாது தமது திருவாயில் முகந்து வந்தார்; கையால் விலக்க முடியாதபடியால் காலால் விலக்கினார். அன்பினாலேயே இவ்வளவும் ஆயது. ஆகவே அவர் செருப்பும் பெருமை யுடையதே. அவர் வாயும் தூய கலசமே. அதில் என்ன ஐயப்பாடு? கடவுள் கண்ணிலே உவக் காண்; குருதி வழிகிறது. தமது கண்ணை முன்பின் பாராது இடந்து அப்புகின்றார் கண்ணப்பர். இறைவனும் அவரைப் பெருங் கடவுள் எனச் சிறப்புச் செய்கின்றான். இதுவே கண்ணப்பர் கதை- இறைவனார் இந்நாயனாரை இறைவனார் ஆக்கிய பெருமையையும், அதற்கு இவருக்கிருந்த தகைமையையும், எதிர் பாராத இடத்தில் இவ்வின்ப அன்பு எழுந்து திகழும் அருமையினையும் புகழ்வதாகும் இத் திருநேரிசை.

**சம்பந்தர்:**-இப்பெருமையையும் தகைமையையும் அருமையையும் பாராட்டித் திருஞானசம்பந்தப் பெருந்தகையார்,

"கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவு வைத்தான்"

என்று இரண்டு வரியில் கதையின் உட்கருத்தை உள்ளுணர்வால் கண்டு அருளிச் செய்தார்.

**நம்பியாண்டார் நம்பி:**—நம்பியாண்டார் நம்பியோ,

"ஏவுசெய் மேருத் தடக்கை
எழிற்றில்லை யம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரானன்றி
அங்கணர் மிக்குளரே
காவுசெய் காளத்திக் கண்ணுதல்
வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட்
டியதிறல் வேடுவனே"

என்று இறைவனது பெருமை ஒன்றனையே புகழ்கின்றார். இறைவனது வன்மைகண்டு மருட்கைகொண்டு பாராட்டுகின்றார் "எச்சில்நீரைத் தலையில் உமிழ்ந்து வழிபட்டான். அவனோ பிறப்பில் மிகமிகத் தாழ்ந்த வேடுவன். அவனுக்கும் வேண்டும் வரம் கொடுத்து இறைவனாக்கி விட்டான் இறைவன். எனவே, சிவனினும் அருளுடையார் யார்" என்று மெச்சிப் புகழ்கின்றார்.

**சுந்தரர்:**—சுந்தர மூர்த்திப் பெருமானாரும் இவ்வண்மையை

"திருநாவினுக் கரையன்
கணைகொள்கண்ணப்பன் என்றிவர்பெற்ற
காதல் இன்னருள் ஆதரித்தடைந்தேன்"

என்றும்,

எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன்
ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன்றுளி வீசும்
திருமிழலை

நிறைந்த அந்தணர் நித்தம் நாள்தொறும்
நேசத் தாலுமைப் பூசிக்கு மிடம்
அறிந்துவீழி கொண்டீர் அடியேற்கும்
அருளுதிரே

என்றும் பாடிப் பரவுகின்றார். அவ்வண்மையைப் பயன்படுத்திக்கொண்டு தனக்கும் அருள் செய்யவேண்டும் என இரக்கின்றார். "முன்னர்க் கண்ணப்பனை உள்ளிட்டோருக்கும் அருள்புரிந்தீர். ஆகையால் உமதிடம் வந்தால்தான் அருள் பெறலாகும் என அறிந்தேன். அறிந்து வந்தடைந்த அடியேனுக்கும் அருள் செயல் வேண்டும்" என இறைவனது திருவருள் திறத்தினைச் சிறப்பித்துக்கூறி இரந்து நிற்கின்றனர். நமது ஆளுடைய நம்பிகள் மற்றோரிடத்திலும்

நற்றமிழ் வல்ல ஞானச சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணப்புல்ல னென்றிவர்
குற்றமே செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கைகண்டு நின்குரை கழலடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப்புன் கூருளானே.

என்று, இந்தக் கருத்தினையே வற்புறுத்திக் கூறுகின்றார். யான் "குற்றமே பெரிதுடையேன், உய்வகையுண்டோ என வருந்தினேன்; கண்ணப்பன் முறைதவறி அன்பு பாராட்டினான், இறைச்சியை யூட்டினான், எச்சில் நீராட்டினான்; அவற்றை எல்லாம் குணமெனக் கொண்டு அருள் புரிந்தீர். அவனொருவனுக்கே யன்று நீர் அருள் செய்தது. மற்றும்பலரும் பயன் அடைந்தார்கள். குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையே உமது கொள்கை என அறிந்தேன். குற்றமே பெரிதுடைய கொடியேனும் உம்மை வந்தடைந்தால் உய்வேன். ஆகவே உம்மை வந்தடைந்தேன் அருள் புரிதல் வேண்டும்" என்று வாயாரப் புகழ்ந்து கையார இரந்து நிற்கின்றார்.

**வேறுபாடுகள்:**— இறைவனது பெருமையை எடுத்துப் பேசவந்த பெரியோர்கள் ஒருவர் கூறியதுபோல மற்றொருவர் கூறாது பலவகையாகப் பலநயம்படப் பல சுவைதோன்றப் புனைந்துரைத்துப்போதல் ஆராயற்பாலதாம். ஆளுடையபிள்ளையார் புராண நடையை ஒட்டிக் கதையின் கருத்துரைத்தார். "காட்டான் கண்ணப்பினான். வீட்டாள் ஆயினான். கண் கொடுத்து வீடு பெற்றான்." என்கின்றார். இக்கருத்தினையே புனைந்துரை வகையால் விரித்துரைத்துச் சொன்னோக்கும் பொருணோக்கும் மிக்கு விளங்கும் பாடல் ஒன்று பாடினார் ஆளுடைய அரசர். கண்ணப்பரது பெருந்தகைமைக்கும் போன்பிற்கும் ஏற்பப் பெரும்பேறு தந்துதவினார் என்று பெருமானின் பெருமையைப் பாராட்டுகின்றார். நம்பியாண்டார் நம்பியோ "ஏதும் கெட்ட வேடன் எச்சிலை உமிழ அதற்கு மகிழ்ந்து வானகம் அருளிய அருட்பெருங் கடல் என ஆண்டவனைப் புகழ்ந்து அவருக்கிணையில்லை எனச் செருக்கித் திளைக்கின்றார். மற்றையவர்கள் இறைவனது வன்மையைப் புகழ்வதோடு நின்றுவிட, ஆளுடைய நம்பியோ வள்ளல்களிடம் சென்று அவர்களை வாயாரப் புகழ்ந்து மணியும் பொன்னும் இரந்து நிற்கும் ஏழைகளைப்போலத் தாமும் இறைவனது பொருளால் பயன்பெற வேண்டி இரந்து நிற்கின்றார். கண்ணப்பர் முதலியோரது கதை எளியோருக்கும் உய்வகை உண்டு என ஊக்கம் தந்து நிற்பதனை அறிந்து பயன்படுத்திக் கொள்கின்றார்.



**அப்பர்-அருள்:**—இன்னும் பல கருத்துக்களையும் இவ்வாறு அழகுபட அப்பெரியோர்கள் பாடியுள்ளார்கள். இறைவனார் கண்ணப்பநாயனாரது அன்பின் வலைப்பட்டு அலைந்ததைத் திருநாவுக்கரையர் மற்றொரு திருநேரிசையில் தெரிவிக்கின்றார்.

காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

என்று இறைவனது இளகிய மனதைப் புனைந்துரைக்கின்றார். அன்பன் தமக்காகத் தனது கண்ணையே அம்புவிட்டு அகழ்ந்தெடுத்துக் கொள்வதைப் பொறுக்காதவராய் நின்றார் கடவுள். "கோப்பதும் பற்றிக் கொண்டார்" என்று இறைவனார் குதித்தெழுந்து துடிதுடிப்பதுபோல ஓசையும் பொருளும் வரக் கூறியது அருமையினும் அருமை. இறையனார் அருட் பெருங் கடல் என்பதை "அருள் என்பதன் படம் எழுதிக் காட்டித் தெளி வுறுத்தினார். கையோடு கையாகக் கண்ணப்பனது அன்பின் பெருக்கையும் கூறியருளினார்.

**மணிவாசகர்-அன்பு:**—கடவுள் அருள் இருந்தவாறு அது வாயின்கண்ணப்பன் அன்பிருந்தவாறுதான் என்ன? ஆளுடைய அடிகளே அதன் உண்மையை அறிந்தவர். மணிவாசகப் பெருமானும் கண்ணப்பர் பெருமையையும் ஆண்டவனார் அருளையுமே புகழ்ந்துரைக்கின்றார். ஆனால் அவர் வேறு வகையாகப் புனைந்துரைக்கின்றார். அப்புனைந்துரையில் கண்ணப்பர் அன்பே தலை சிறந்து விளங்குகின்றது.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட்
கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற
வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய்
கோத்தும்பீ

என்னும் திருச் செய்யுளினை அறியாதார் யார்? "கண்ணப்பரோ அன்பில் தலை சிறந்தார். ஆண்டவனாரும் அவரைப்போன்ற அடியாரையே வேண்டி நின்றார். பல நாள் தேடிப்பார்த்தார். அவர்க்கு ஒப்பானவரைக் காண்பது எவ்வுலகிலும் அருமையாயது. 'இனி என்செய்வது. எவ்வளவு கீழானவராயினும் அன்பாக்கிக் கொள்வது' எனப் புறப்பட்டார். புறப்பட்டார்முன் எதிர்ப்பட்டேன் ஏதும் கெட்டஎன்னையும் வா என அன்புடன் அழைத்து ஆட்கொண்டருளினார் ஆண்டவர்" எனவியந்து பாராட்டுகின்றார். இந்தக் கருத்தை ஒட்டிச் சிவப்பிரகாசனாரும் பாடியிருப்பது திருமுறை யல்லவாயினும் ஒற்றுமை பற்றி இங்கேயே கூறிவிடலாம். மணிவாசகரை ஒட்டிப் பாடியதாகும் அப்பாடல் அடிகள் தம்மொடு கண்ணப்பரை வைத்து வேற்றுமை கூறினாற்போலச் சிவப்பிரகாசரும் தம்மொடு வைத்து வேற்றுமையை விரிவாகக் கூறுகின்றார். ஆனால் அப்பாடல் வேறுவகையில் அமைந்துள்ளது.

"ஆடுற அடியேன் புதுக்குடம் தருநீர்
அன்பன் வாய்ப் புனலுனக் காமோ
கூடையின் மலர்பித் தையிற்றரு மலரோ
கூறுமென் கவியவன் மொழியோ"

என்று இரங்கிக் கதறுகின்றார். ஈது சேக்கிழாரினின்றும் சிவப்பிரகாசர் தமது நூலில் திருடிவைத்துச் சாணை பிடித்ததோர் அருமணியாகும் (கண்ணப்ப நாயனார் புராணப் பாடல் 156-163.) சிவப்பிரகாசரது பாடல் மணிவாசகரது மற்றொரு பாடலிடம் நம்மை இழுத்துச் செல்கின்றது. நீராட்டல் பூச்சூட்டல் ஊண் ஊட்டல் என்ற வகையிலே கண்ணப்பர், வழிபாடும் மற்றையோரது வழிபாடு போலவே இருந்தது. ஆனால் முன்னதன் ஆழம் என்னே, என்னே!

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்
போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம்
ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய
மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம்
ஆடாமோ

என்கின்றார். கண்ணப்பன் அன்பின் அருமையை அடிகள் அறிந்ததுபோல வேறு யார் அறிவர். கண்ணப்பர் அன்பு அத்தகையது ஆகும்.

**பட்டினத்தார்-அருமை:**—அவ்வருமைபற்றி யல்லவா பட்டினத்தடிகள் அதனை எண்ணியதும் திடுக்கிடுகின்றார். கண்ணப்பரது திருத்தொண்டினைப் புகழ்ந்து வியந்து, 'அரிது, அரிது' என நடுநடுங்கி "அங்ஙனம் செய்ய மாட்டாத யான் எங்ஙனம் உய்வேன்" என்கின்றார்.

வாளால் மகவரிந் தூட்டவல்
லேனலன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல்
லேனலன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்
லேனலன் நான்இனிச் சென்று
ஆளாவ தெப்படி யோதிருக்
காளத்தி அப்ப னுக்கே"

என்று இரங்குகின்றார்.

T. P. மீனாக்ஷி சுந்தரன்.

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 2. நாட்டுப் படலம்.

(157-வது பக்கத் தொடர்ச்சி)

### சுதந்தர சமத்துவ மெய்திய சோதரர்.

நாட்டின்கண் நடைபெறும் மானுட வாழ்க்கை இருவிதப்படும். ஒன்று அவரவர் எய்திய தனிவாழ்வு. மற்றது அனைவரும் ஒருங்குகூடிச் செலுத்தும் பொதுவாழ்க்கை. இதுவரையில், கம்பரின் உதவிகொண்டு கோசலமக்கள் தத்தமளவு அழகோடும் அன்போடும் வாய்மையோடும் உற்றுவாழ்ந்த பெருமை இருந்தவாறு கண்டோம். இனி அவர்களுக் கெல்லாம் ஒருங்கே யமைந்த பொதுஜன

வாழ்க்கையில் அனைவரும் கலந்துவாழ்ந்த சிறப்பையும் இங்குச் சிறிது காண்போம்.

பொதுஜன வாழ்க்கையில் யாவரும் யாவருக்கும் சமமாயிருப்பதே சிறந்த தத்துவம் என்பது அறிஞரால் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததே. எனினும், அந்தச் சமத்துவத்தை அளக்கின்ற அளவுகோல் யாவதாய் இருத்தல் வேண்டுமென்று சிந்தித்தவர் வெகுசிலர். இவ்வளவுகோல் இருக்குமிடங்கூடத் தெரியாதவர் வாயினில் தற்கால நாகரிகம் என்றொரு வாசகம் அகப்பட்டுத் திண்டாடுகின்றது. முற்காலத்திலே யிருந்து தற்காலத்தை வேறுபடுத்திப் பின்னதற்குச் சமத்துவமே உயிர்நிலையாய் நிற்கின்றதென்றும் மாறியஉலகத்தோடு ஒத்துவாழ்வ தின்றியமையாததென்றும் மிகுத்துரைப்பார் ஒரு சாரார். பண்டைக்காலபக்தி மிகுந்த மறுசாரார், சமத்துவ உணர்ச்சி இக்காலத்திற்கே உரிய புதிய உணர்ச்சியன்றென்றும், முற்கால நோக்கமும் அதுவேயா யிருந்ததென்றும் சாற்றி, அதற்கு ஆதாரமாகக் கிராமப் பஞ்சாயத்துபோன்ற முறைகளை எடுத்துக் காட்டுவார். இவ்விரு திறத்தோர் ஆராய்ச்சியும் நடுநிலை வாய்ந்த தன்மையுடைய தன்று. நம் முன்னோர்மாட்டுச் சமத்துவ நிலையே யிருந்தது. ஆனால், சுதந்தரத்திலும் சகோதரத்துவத்திலும் அன்போடு அறமாற்றும் ஆற்றலிலும் சமத்துவம் வாய்ந்திருந்ததே யல்லாது செல்வத்தையும் செல்வாக்கையும் நிறுத்துவைத்த கொள்கையை அது சார்ந்ததில்லை. "எல்லார்க்கும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே, இல்லார்களுமில்லை உடையார்களுமில்லை" என்று அடுத்த படலத்தில் சொல்கையில் கம்பர், செல்வத்தின் சமத்தினால், 'உண்டு இல்லை' என்னும் பேதம் நீங்குமாயினும், 'ஏற்றம் தாழ்வு' என்ற மாறுபடுநிலை ஒழியாதென்று காட்டுவார். இம்மாறுபாடொழிய வேண்டுமாயின் மக்களுள் ஒவ்வொருவரும் சீலமும் வாய்மையும் தனித்தனி எய்தினவர் ஆதல் வேண்டும். தனிமக்களின் தொகுதியே பொதுஜன மாதலால், தனிவாழ்க்கையில் அன்பும் அறனும் இலதாயின் பொதுவாழ்க்கையும் எவ்வகைப்பண்பும் பயனும் பெறுவதிலது! ஆதலால்லவோ நெடுந்தூரம் நோக்கவல்ல நம் புலவர் தான் கற்பித்த நாட்டில், மக்கள் அவரவர் இருக்கும் வண்ணம் இதுவென்று பலவாறு வகுத்துக் காட்டிப், பொதுத்தன்மையை இரண்டொரு செய்யுட்களால் மாத்திரமே தொகுத்துக் கூறியுளார்.

ஒத்த மனத்தினராயின் மாந்தர் பொதுஜன வாழ்க்கையில் ஒத்தநிலையினை யுடையவருமாவர். அதுவன்றி, மக்களின் உள்ளத் தூய்மையை ஒருபோதும் எள்ளளவும் பொருட்படுத்தாமல், அவர்களை இரைக்கே அலையும் காட்டு விலங்குகளுக்கு நிகராக வைத்துக்கொண்டு, அன்பிற்கு மாறான செய்கையும் நினைவும் அவர்களுக்கு இடைவிடாமல் போதித்துக் கொண்டே, சட்ட திட்டங்களாலும் ஆசார விவகாரத் திருத்தங்களாலும் புறத்தினின்று ஒரு சமத்துவத்தைப் புகட்டித் தேசத்தைத் தேவலோகமாக்கிவிடச் செய்கின்ற முயற்சியாவும், இரலவாத வித்தைபோல், பொய்யாற் பிறந்து பேதைமையாற் பாராட்டப்படுகின்ற முயற்சியேயாய் முடிவதுமாகும்.

மற்றுச் சமத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றவர்கள் வாயளவேனும் உயர்ந்த தத்துவங்கள் கொண்டாடப்படாதா! அதுவும் இல்லையே! சமத்துவம் சமத்துவம் என்று செல்வத்தையும் செல்வாக்கையும் மட்டம் தட்டிக் கொல்லத்தொழில் தானே, இரண்டொருவர் தவிர, யாவரும் புரிகின்றனர். "குன்றென்றும் குப்பை மேடென்றும் காட்டினில் பேதமிருப்பானேன்! குன்றுகளை யெல்லாம் குப்பை மேடாவது ஆக்கிவிடு, அல்லது குப்பைமேட்டைப் பார்த்துக் கயிலாயமலையே என்றேனுமழைத்திடு," என்பர் இந்நாள் பொதுஜன வாழ்க்கையுள் உலகெங்கும் ஊடாடும் பெருமக்கள். சமத்துவச் சித்திரம் இதுவாயின் குப்பைமேட்டிற்கு ஓர் கும்பிடு!

சமத்துவத்தை முன்னும் பின்னும் தொடர்ந்து இன்னும் இரண்டு சொற்கள் இந்நாள் வழங்கி வருகின்றன. ஒன்று சுதந்தரம், மற்றது சகோதரத்வம். இந்தச் சுதந்தர சமத்வ சகோதரத்வங்கள் (Liberty Equality and Fraternity) நன்மக்களது வாழ்க்கையில் தாமேயாகத் திரண்டெழுகின்ற பொதுநலங்களுக்கு இட்டபெயர்கள். அல்லாது புறத்தேசெய்து புகுத்தக்கூடிய பொருளேனும் குணமேனும் அவை அல்ல. பாலின் சுவை திரண்டுமேலெழுவது பாலாடை. அதனைக்கொண்டு கரைத்தநீர் பாலென்று ஆகாது. நீருக்கு நீருங்கெட்டு ஆடைக்கு ஆடையும் போய்விடுகின்றதன்றி வேறெது கைகூடும். பிறரால் தனக்கொரு தீங்கும் நேராது என்னும் சஞ்சலமற்ற நினைவே சுதந்தரஉணர்ச்சியின் மெய்த்தன்மையாயிருப்பதுபோக இந்நாள், பிறர்செய்யும் தீங்கினின்று தப்பித்துக்கொள்வதற் கியல்வதே சுதந்தரம் என்று கருதப்படுகின்றது. சகோதரத்வ மெல்லாம் என் பங்கைத் தாவென்று கேட்பதற்கு உதவுகின்ற ஓர் இன்றியமையா உறவெனும்நினைவினில் அடங்கிவிட்டது இன்னும், துரியோதனன் திரௌபதியைத் துகிலுரிந்ததும் சகோதர உரிமையாற்றான். பிறர் மனைவியைப்பற்றியவன் துகிலுரிந்ததில்லையே! ஆதலால் சுதந்தரமும் சமத்துவமும் சகோதரத்வமும் பேச்சளவில் பொதுஜனச் சித்திரமாய்த் தோன்றினாலும், தனிமனம் தேர்ச்சியுறாத காலத்து யாதொன்றும் சாதித்து வைக்கமாட்டா. நீரில் கரைத்த ஆடைபோல் அவைகளின் பெருந்தான் பாவம் கெட்டுப்போய்விடும்.

சுதந்தரதாகம், என்று வழங்குகின்றவர்கள், சுதந்தரத்தின்தன்மை யின்னதென்று உணராது அதை ஒரு நோயே ஆக்கிவிட்டனர். சுதந்தரம் தாகம் அன்று. அன்பினால் தன்னை உலகத்தோடு ஐக்கியம் செய்துகொள்ள வேண்டுமென்ற தாகம் எடுத்தவனுக்குச் சமனம் சுதந்தரம். சமத்துவ உரிமை என்பது உடைமையின் அளவினால் ஏற்படுவதல்ல; செயல்வகையில் தாராதரமின்மையே சம உரிமை. அறஞ் செய்வதற்கு இருக்கின்ற உரிமையை இதுவரையில் யாரும் அபகரித்ததில்லையே. சகோதரபாவம் என்னுந் தொடரே அதனை மெய்உணர்ச்சியினின்று பிரித்துப் பொய்ப் பாவனையாக்கி விட்டது.

இதுவரையில் செப்பியயாவும் புதிய நோக்கங்கள் என்ற நினைவில் நாம் எழுதி வந்ததில்லை. வெளித்தோற்றத்தை ஒரு சிறிது விலக்கி வாழ்க்கையின் உயிர்நிலையை ஆராய்ந்த அறிஞரனைவர்க்கும் இவ்வுரையிற் கண்ட பொருள் வெகுசாதாரணம். இருப்பினும், கம்பரின் கருத்தும் இதுவே என்றுகாட்டுகின்ற இரண்டுசெய்யுள்களைச் சொல்லப்புகும் சமயத்தில் இவ்வெண்ணங்களை மீண்டுமோர்முறை நம்மனத்திற்குக் கொண்டுவந்து சோதித்துப் பார்த்துவைத்துக்கொள்வது நலமென நினைத்து முன்னுரையாக ஈங்கிவ்வளவு கூற நேர்ந்தது.

கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையால்
சீற்ற மில்லைதஞ் சிந்தையிற் செய்கையால்
ஆற்ற னல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே.

[அந்நாட்டில் குற்றம் ஒன்றும் இல்லாதபடியினால் எமன் என்பது இல்லை. எல்லாரும் தன் மனதின்படி செய்வதால் கோபம் என்பது இல்லை. நல்ல அறங்கள் செய்வது தவிர வேறு ஆற்றல் இல்லாதபடியினால், உயர்வு அல்லது தாழ்வு என்னும் வித்தியாசம் இல்லை].



செய்யுளில் இருக்கின்ற சொற்கள் வரையில் பார்த்தால் இவ்வளவுதான் பொருள் எஞ்சும். ஆனால், கூற்றம் சீற்றம் ஆற்றல் என்பனவற்றின் உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தாலன்றி நம் புலவர்பெருமானது இருதயத்தை அறியமாட்டோம்.

விதித்த விதிகளுக்கு மாறாகச் செய்வது குற்றம். அவ்விதிகளைப் பொதுவகையில் நான்கு பிரிவுகளுக்குள் அடக்கலாம். சுகாதாரவிதிகளைப் போன்றவை இயற்கை விதிகள். தேசச்சட்டங்கள் அரசவிதிகளாம். பாகதிக்குரிய தர்மசாஸ்திர விதிகள் மூன்றாவது. சாதி குல ஒழுக்கங்களுள் அடங்கியன ஆசாரவிதிகள். ஆராய்ச்சியின் நிமித்தம் நான்கென்று விதிகளுக்கு எல்லையிட்டாலும் அவைதாம் எப்பொழுதும் ஒன்றனிற்கொன்று ஒரு சம்பந்தமும் இல்லாமல் தனித்தனி தம் அதிகாரத்தைச் செலுத்தியே வரும் என்ற நியதியில்லை. சிற்சில விதிகள் தம் வகைக்கே சிறப்பாயிருக்கும். மற்றும் சில விதிகள் மற்றவகைகளுள் ஒன்றிரண்டனோடு பொதுப்பட்ட அதிகார முடையனவா யிருக்கலாம். மது வுண்ணப்படாதென்பது ஒரு விதி. இது ஆசாரத்திற்கும், சுகாதாரத்திற்கும், ஐம்பெரும் பாவங்களுள் ஒன்றாய்ச் சாஸ்திரக் கோட்பாடுகளுக்கும் சிலஇடங்களில் தேசச் சட்டத்திற்கும் பொதுவா யமைகின்ற விதிக்கு உதாரணம். மிதமிஞ்சிப் புசிக்கப்படாதென்பது சுகாதாரத்திற்கே சிறப்பாயமைந்த விதி. கொலைசெய்தல், தர்மசாஸ்திரம் அரசச் சட்டம் இரண்டினிற்கும் விரோதமா யிருக்கின்றது. இனி விதி எவ்வகைத்தேனும் அன்னதற்கு மாறாகச் செய்வதே குற்றம் எனப்படும். குற்றத்திற்காக அடைவது தண்டனை. அஞ்சுபவர்மாட்டே தண்டனை செல்லும். அந்த அச்சத்தைத்தான் கம்பர் இங்குக் கூற்றம் என்றழைத்தார். கோசலத்திலே கூற்றுவன் இல்லை யென்றதால் அங்குச் சாவென்பதே இல்லாது யாவரும் பிறந்தவர் பிறந்தபடி இறவாதிருந்தனர், என்பது கருத்தல்ல. அல்லது நிறையாயுள் உடையவராய் யாவரும் வாழ்ந்தனர் என்று அவ்வடி குறிக்கின்ற தென்பதோடும் அடங்கிய கருத்தவ்வளவும் முற்றுப் பெறாது. எமன் என்பதற்கு இங்கு எமபயம் என்பது அர்த்தம். எமன் வருவானோ எனும் பயத்தால் பீடித்தவண்ணமா யிருந்தவர்கள் அங்கிருந்ததில்லை. எமனுக்குப் பயப்படுவது இருவிதத்தில். எமன் இம்மைக்கு முடிவாயும் மறுமைக்கு முதலாயும் நிற்கின்றான். சிலர் இவ்வுலக வாழ்வு முடிவதற்கு அஞ்சுகின்றனர். சிலர் வாழ்க்கை வெறுப்புற்று உயிரைப் பெரும் பொதியாய்ச் சுமக்கின்றநிலையில் இருப்பாரானாலும் இறந்தபின் எக்கதி கிடைக்குமோ என்னும் பயத்தால் எமனுக்கு அஞ்ச நேரிடுகின்றது. இருக்கும் இந்நாளுக்கு இறுதிவருமோ என்னும் அச்சத்திற்கும், மறுநாள் எவ்வாறு விடியுமோ என்னும் அச்சத்திற்கும் இரண்டிற்கும் காரணம் அவரவர் செய்த குற்றங்களே. ஆதலால், அச்சமில்லையானால் கூற்றம் இல்லை. குற்றமில்லை யானால் அச்சம் இல்லை. எனின் குற்றம் இல்லையானால் கூற்றம் இல்லை என்பது தர்க்கத்திற் கியன்றதோர் முடிவு. குற்றத்தால் வருவது கூற்றம், என்று கம்பர் ஓர் தத்திதாந்தநாமம் இங்குக் கற்பித்தார் போலும்.

இனி, உயிரிற்கு இறுதிசெய்வது ஒன்றே கூற்றமன்று. என் மானத்திற்குக் கூற்றாய் வந்தான், என் பணத்திற்கு எமனாய் வந்தான், என் தூக்கத்திற்கு யமனாய் வந்தான், என்றன போன்ற வழக்கங்களில் எதற்கும் அழிவு செய்பவன் என்ற பொருளில் எமன் வருகின்றதைக் காண்கின்றோம். ஒருவனை ஒருவன் கொலை செய்துவிட்டால், உயிரைக் கொண்டுபோகும் எமனொருபுறமிருக்கக் கொன்றவனையும் இவனுக்கவன் எமனானான் என்று கூறுவதுண்டு. ஆதலால் மற்றவரால் நமக்கு ஒரு தீங்குவரும் என்றுஎண்ணி அஞ்சுவதுங்கூட ஒருவிதத்தில் எமபயமேதான். பிறரால் வருவதுபோல் வெளித்தோற்றத்தின்படி நேர்ந்தபோதிலும் உண்மையாக அவனவன் அடைகின்ற தீங்கு அவனவன் செய்த குற்றங்களின் தண்டனையே ஒழிய வேறல்ல. கண்காணு எமன் ஒருவன் இருப்பது கிடக்கக் கண்கூடாக வந்து நம்மை நலிகின்றவர்கள் யாவரெனில் நமது குற்றங்களே உருவெடுத்துச் சிக்ஷை செய்யவந்த தண்டனையின் அவதாரங்கள். எனின் நம்மிடத்தில் குற்றம் இருந்தால்தான், எவன் நம்மைக் கொல்வனோ நம்பொருளைக் களவு செய்வனோ, மற்றெவ்விதத்திலேனும் தீங்குசெய்வானோ என்னும் சந்தேகமும் பயமும் நமக்கு உண்டாகக்கூடும். குற்றம் இல்லாதவர்க்கு இந்தக் கூற்றமும் இல்லை. இவ்வித அச்சம்தான் வாஸ்தவத்தில் இவ்வுலக வாழ்க்கையில் மனிதரைச் சிறைப்படுத்தி வைப்பது. இங்கு மனிதரால் தீங்கு வருமென்பது மனுஷ்ய பயம். பின் தெய்வத்தால் வருமென்பது தெய்வ பயம். இவ்விரு பயமும் இன்றி வாழ்வதே சுதந்தர வாழ்க்கை. இருவகையினும் குற்றமே கூற்றமாதலால் குற்றம் ஒன்றும் அவனவன் இழைக்காத வரையில் அவனவனுக்குத் தானாக எய்திய நிலை சுதந்தர நிலை. கோசலத்திற் காணும் சுதந்தரம் இத்தன்மையது.

சுதந்தரம் அல்லது விடுதலை பெறுவதெனும் ஒரு தத்துவம் எமபயத்தினின்று நீங்குகின்ற இதுவேயாம், என்பதைத் தாயுமானவர் தனக்கு உண்மை ஞானம் பிறந்ததெனத் தெளிந்தவுடன், அந்தகனை அறைகூவி ஏசுகின்ற சொற்களே நிலைநிறுத்தும் :

அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற்
றுபாச வடிவமான
அந்தகா நீயொரு பகட்டாற் பகட்டுவ
தடாதடா காசுநம்பால்
செல்லாதடா !

[கருத்திருண்ட சரீரமும் படுகுழிபோன்ற கண்களும் கோரப்பற்களுமுடைய ஏ ஆபாச வடிவமான எமனே, இனி, நீ உன் பயங்கரமான ரூபத்தைக்கொண்டு என்னை மருட்டி யுருட்டி உனக்கு நான் பயந்துகிடக்கும்படி செய்ய முடியாதடா. உன் காசு இனிமேல் என்னிடத்தில் செல்லாதடா!]

இருந்த குற்றத்தைப் போக்கியவ ரொருவர் எய்திய குதூகலம் இது. மற்றுக் குற்றமே ஒருநாளும் அறியாத கோசலத்தவர் நிந்தித் திகழ்வதற்குங்கூட அந்தகனைச் சிந்திக்க நியாயமில்லை.

விதித்த விதிகளுக்கு மாறுபட நினையாத மனநிலையின் மறுபெயர்தான் சுதந்தரம் என்று இச்செய்யுளின் முதலடி காட்டித்தந்தது. இரண்டாவது அடியில்வந்த சீற்றத்தின் தன்மையை அறிவோமானால் சகோதரத்வத்தின் உண்மையை எய்தினவராவோம். கூட்டுறவின் நலமெலாம் குலைவது பெரும்பான்மை கோபத்தால். உயிர்த்தோழர் உடன்பிறந்தார் உற்ற உறவினர் எத்தனை பேர் நினையாதுரைத்த ஒரு சொல் காரணமாகத் தொடர்பற்று நெடுந்தூரமாகின்றனர்! இச்சொல் சிந்தனையின்றிச் சொல்லப்படுகின்றது. இப்படிச் சிந்தனை விலகி இருக்கின்றபோதுதான் மனதிலே சீற்றம்வந்து எய்த இடம் ஏற்படும். மறுபடி சிந்தனைவந்ததும் கோபம் போய்விடவேண்டும். ஆயின் என்! சொன்ன சொல் எஞ்சி நிற்கின்றதே. பழுத்த இரும்பு சுட்டபின் ஆறிவிட்டாலும் வடுவோ என்றும் மாறாது கிடக்கும்.

கடிதின்தோன்றிக் கடிதின் அகல்கின்ற கோபத்திற்குத்தான் சீற்றம் என்று பெயர். தங்கிய பகை

18992

யாயின் அது செற்றம் எனப்படும். செற்றம் குற்றத்துள் அடங்கி முதலடியினால் கோசலத்தினின்று விலக்கப் பட்டுள்ளது. சிந்தை மறந்து இருந்தாலன்றிச் சீற்றம் இல்லை. என்னையும் அறியாமல் கோபம் வந்து விட்டது, என்று சொல்பவர் சொல்கின்ற சமாதானம் மெய்யே. கோபம் வந்திருக்கின்றது இப்பொழுது நமக்கு, என்ற நினைவு வருமானால் அந்த நிமிஷமே வந்த கோபம் பறந்தோடி விடவேண்டும். நானிப்பொழுது கோபித்துக் கொண்டிருக்கின்றேன், என்ற எண்ணத்தோடு மெய்யாகக் கோபம் பாராட்ட முடியுமோ என்று பரிசோதித்துப் பார்த்தால் இதனுண்மை தெரியவரும். ஆதலால் சிந்தை செல்லாதவழி சிலசெயல்கள் நிகழக் கூடியதாய்த் தளர்ந்திருக்கின்ற மனமுடையவர்க்கே சீற்றம் வருவதற்கு இயலும் என்பது விளங்குதற்கு அருமையல்ல. கோசலத்தவர், சிந்தையில் செய்பவர். சிந்தையோடு செய்பவர், சிந்தையினால் செய்பவர், என்று எவ்வேற்றுமையில் பொருள் கொண்டாலும் முடிவு ஒன்றே. சிந்தையால் நினைத்த கருமத்தை மாத்திரம் செய்வார் என்றால், நினையாது செய்கின்ற சீற்றம் இருப்பதற்கு நியாயமே யில்லை என்று விலக்கப்படுகின்றது. சீற்றமே யில்லை யெனில் பகையேது!

யார்மாட்டும் குற்றமில்லை யென்றதனால் அவரவர் தமக்கேயும் ஒருவர் பிறர்க்கேனும் கூற்றமாயமைந்ததில்லை என்று கம்பர் முன்னடியில் இரட்டுற மொழிந்ததுபோலவே இங்கும் சீற்றத்தை இருதிறத்திலும் விலக்கிவைத்துளார். சீற்றத்திற்கு முதற்காரணம் தன் வரையில் தளர்ச்சியுற்று நினைவை நழுவவிட்டுவிடுகின்ற தன்மனமேயானாலும், இத்தளர்ச்சியைத் தூண்டும் துணை புரிவது பிறர் செய்கை. ஆயின் பிறரது எவ்வகைச் செய்கை நமக்குக் கோபம் உண்டாக்கும் எனும் மானஸ தத்துவத்தைச் சிறிது ஆழ்ந்து ஆராய்ந்தால் ஒரு பொதுத்தன்மை புலப்படும். நமது எண்ணத்திற்குப் பிறனொருவன் மாறாகச் செய்வதாலன்றி வேறு எவ்வகையிலும் கோபம் பிறக்காது. இந்த உண்மையைச் சொல்லிவைத்தாலே போதும், உதாரணங்களால் ஸ்தாபிக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. இதனைப் படிக்கின்றவர்கள், சீற்றத்திற்குக்(கடிதின் தோன்றி கடிதின் மறைகின்ற கோபம்) காரணமாய்ப் பிறர் செய்கின்ற எந்த எந்தச் செயல்கள் நேரலாம் என்று நினைத்துப் பார்த்துக் கொள்ளட்டும். எல்லாம், தன் இஷ்டத்திற்கு விரோதமாகப் பிறனொருவன் நடந்து கொண்டனவாகத்தான் முடியும் என்பதற் கையமில்லை. எனின், 'சிந்தையிற் செய்கையால்' என்னும் தொடரை மீண்டுமோர் முறை எடுத்தாண்டு, எல்லாரும் எல்லாருடைய இஷ்டத்தின்படியும் செய்கின்றபடியால் சீற்றமில்லையென்று சினத்தைத் தூண்டுகின்ற பிறர்செயல்களையும் விலக்கிக்கொள்ளலாம். எல்லார் இஷ்டப்படியும் எல்லாரும் நடப்பது கோசலத்தில் வெகு எளிது. குற்றமில்லாதவர் பிறரைக் குற்றம் செய்ய எதிர்பாரார். மற்று, தன்னயம் கருதுகின்ற காலத்தில்தான் மற்றவர் விருப்பிற்கு மாறாகச் செய்யவேண்டி வருமாகையால் சுயநயச் சிந்தையில்லாத அந்நாட்டில் யாருக்குத்தான் அயலான் இஷ்டத்திற்கு எதிராகச் செய்யச் சந்தர்ப்பம் ஏற்படும்! இருபுறத்திலும் சீற்றமென்னும் மனநிலையின்மையாக யாவர்தம் எண்ணத்தையும் யாவரும் நிறைவேற்றி வைப்பதும் செயலாக எய்துகின்ற நிலையின் பெயர் சகோதரத்வம். இதுவும் புறத்தேயிருந்து புகுத்தவல்லதன்று.

இனி, மனதின் நிலையினால் சுதந்தரமும், மனது வாக்கினோடு சேர்ந்தமைந்த நிலையினால் சகோதரத்வமும் முதலிரண்டு அடிகளில் விளக்கிய நம் கவி பின்னிரண்டடிகளால், மனது காயத்தோடு சேர்ந்து நிகழ்கின்ற நிலையினால் சமத்துவத்தின் தன்மையையும் விளங்க வைக்கின்றார்.

மனிதர்க்குள் ஏற்றம் தாழ்வு அவர் படைத்த பொருளளவு பேதத்தினால் ஏற்படுவதுபோல் தோன்றினாலும், வாஸ்தவத்தில் அதுவல்ல காரணம். அப்பொருளைக் கொண்டு அவர் ஆற்றவல்ல செயல்களால், செல்வாக்கு அதிகாரம் முதலிய வேறுபட எய்தி வலியோர்சிலரும் மெலியோர்சிலருமாய் முடிய நேர்கின்றது. அப்பொருளைக்கொண்டு செய்வன வெல்லாம் தம்மையே கருதிச் செய்தால்தானே இந்நிலை எய்தும். மற்று, அறமே நோக்கிச் செய்தால் அறஞ் செய்வாருள் எவர் பெரியர், எவர் சிறியர். ஆற்றல் நல்லறம் அல்லது அங்கு இலாமையால் ஏற்றமேனும் அல்லது இழிதகவேனும் இல்லையாயிற்று. இனி, ஆற்றல் என்னும் சொல்லிற்கு 'வல்லமை' என்ற அர்த்தங்கொண்டாலும், அறத்திலே ஆற்றலுடையாரேயன்றி மறத்தினாற்றல் மதியார் என்றபின், ஏற்றமேது இழிதகவு ஏது! ஆதலின் அறமே செய்கின்ற மக்களிடை வாய்க்கின்ற ஒரு நிலைமையின் பெயர் சமத்துவம் என்பது. அதுவும் புறத்தினின்று ஆக்கி ஜனத்தொகுதியுள் சேர்ப்பதென்றாவது, ஜனங்கள் முயன்று தம்முள் பெறுவதென்றாவது எண்ணுவது தலைகீழ்ப் பாடம்.

இந்தச் செய்யுளோடு சேர்த்து நோக்கவேண்டிய செய்யுள் இப்படலத்துள் ஒன்று உளது. அது குறிக்கின்ற தத்துவமும் வெகு முக்கியம்!

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

[கோசலதேசத்தில், வறுமை என்பது இல்லாதபடியினால், ஈகை என்பதும் காணவில்லை. இவர்களுக்கு நேரான பகைவர் இல்லாதபடியினால் வீரம் என்பதும் காணவில்லை. பொய்யென்பது ஒன்று அங்கு இல்லாதபடியினால் உண்மை என்பதும் காணவில்லை. ஆனால், கேள்வியறிவு யாவர்க்கும் பொருந்தி யிருத்தலால் அறியாமை என்பது இல்லாததாயிற்று.]

வண்மை திண்மை உண்மை, போன்ற குணங்கள் இருந்து நிகழ்கின்ற தன்மைகள் அல்ல. இருக்கத் தகாதன ஒழிய எஞ்சிய நிலைகள் இவை. வெண்மை யொன்றே அதுவரையில் முயன்று விலக்குதற்கு இயன்றது.

T. N. சேஷாசலம்.



# வானசாஸ்திரம்

[முன் 152-ம் பக்கத் தொடர்ச்சி]

## II
## தூர திருஷ்டி
## (Telescope)

வானசாஸ்திர ஆராய்ச்சி ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பற்பல தேசங்களில் நடந்து வந்திருந்தபோதிலும் தற்காலம் நம்மவர்க்குள் வழங்குகின்ற வானசாஸ்திரத்தைப் பற்றிய அறிவெல்லாம் வெகுசில ஆண்டுகளுக்குள் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் மூலமாய்க் கிடைத்தவை. இதுவரையில் எவ்விதத்திலும் தெரிந்துகொண்டிருக்க முடியாத அநேக அதிசயமான விஷயங்கள் இக்காலத்தவர்க்குத் தெரிந்திருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் ஆதாரமாய் இருந்தது கி. பி. 1609-ம் ஆண்டு முதன்முதல் உண்டு பண்ணப்பட்ட தூரதிருஷ்டியே. இதன் மூலமாக தூரத்திலிருக்கிற வஸ்துக்களைப் பெரிதாகவும் சமீபத்தி லிருப்பதாகவும் காணலாம். தூரதிருஷ்டி சமைக்கப்பட்ட காலம் தொட்டு இதுகாலபரியந்தம் வானிலுள்ள பல அண்டங்களின் தன்மை உருவம் அமைப்பு அவைகளின் சலனங்கள் அவைகள் ஒன்றிலிருந்து மற்றொன்று நிற்கும் தூரம் ஆகிய இவைகளைப் பற்றிய அறிவு வளர்ந்து கொண்டே வருகிறது.

தூரதிருஷ்டியை முதன்முதற் செய்தவர் ஒல்லாந்து தேசத்தில் மூக்குக்கண்ணாடி செய்துவந்த ஹான்ஸ் லிப்பர்ஷி (Hans Lippershy) என்னும் ஒருவர். பின், ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்ப்பதற் கேற்ற மாதிரி முதல்முதல் அமைத்து, இதன் மூலமாக அவற்றைச் சோதனை செய்தவர் கலிலியோ (Galilio) என்னும் இத்தாலிய தேசத்துச் சகலசாஸ்திர நிபுணர். ஆரம்பத்தில் செய்யப்பட்ட தூரதிருஷ்டிகள் மிகச் சிறந்தவையன்று. வெகு சீக்கிரத்தில் இவைகளை உண்டுபண்ணுவதில் தேர்ச்சி ஏற்பட்டதும் இவைகளின் நீளமும் வளர்ந்து வந்தது. மிகவும் தூரத்திலிருக்கிற வஸ்துக்களைப் பார்க்கவேண்டுமானால் தூரதிருஷ்டிக் குழாயின் நீளம் அதிகமாய் இருக்கவேண்டும். ஆகவே முதலில் இவை அதிக நீளம் உள்ளனவாகச் செய்யப்பட்டன.

1722-ம் ஆண்டு 212 அடி நீளமுள்ள ஒரு தூரதிருஷ்டியை வானசாஸ்திரி ஒருவர் உபயோகித்ததாய்த் தெரிகிறது. இவற்றைக் கையாள்வது மிகவும் கஷ்டமாயிருந்தது. இவைகளில் வேறு சில குறைவுகளும் இருந்தன. நாளடைவில் இந்தக் குறைபாடுகள் நிவர்த்தியாகி நீளம் குறைந்தனவும் அகலம் அல்லது குறுக்களவு கூடியவையுமான தூரதிருஷ்டிகள் ஏற்பட்டன. பூமியிலுள்ள வஸ்துக்களைப் பார்ப்பதற்குச் சிறிய தூரதிருஷ்டிகள் போதும். ஆனால் ஆகாயவெளியைச் சோதிப்பதற்கு மிகவும் பெரிய தூர திருஷ்டிகள் வேண்டும். இப்போது உலகத்திலிருக்கும் தூரதிருஷ்டிகளில் மிகவும் பெரியது, ஐயர்லாந்து தேசத்தில் லார்ட்ரோஸ் என்பவரால் 1845-ம் ஆண்டு செய்து நிறுத்தப்பட்டது. இதன் நீளம் 56 அடி, குறுக்களவு 6 அடி. இதைத் தவிர அமெரிக்காவில் யேக்ஸ் என்னுமிடத்திலுள்ள தூர திருஷ்டியும் மிகவும் பெரியது. இது 3½ அடி குறுக்களவும் 60 அடி நீளமும் உள்ளது. இவையல்லாது வேறு சில இடங்களிலும் இவைபோன்ற பெரிய தூர திருஷ்டிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. தூர திருஷ்டிகள் இந்த அளவுக்கு மேற்பட்டால் அவைகளில் சில குறைகள் ஏற்படுமாகையால் இந்த அளவுக்குமேல் செய்வதற்கு ஒருவரும் எத்தனிக்க மாட்டார்கள்.

இவ்வளவு பெரிய அளவுள்ள கருவிகளை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவது முடியாது ஆகவே இவைகளை ஒரே இடத்தில் நிறுத்துவது அவசியமாய் நேர்ந்தது. இவைகளை நிறுத்தி வானத்தைப் பரிசோதனை பண்ணுவதற்காக விண்பார்வை மண்டபங்கள் (Observatory) கட்டப்பட்டன. தற்காலம் உலகமெங்கும் முக்கியமான விடங்களிலெல்லாம் இவ்விதமான விண்பார்வை மண்டபங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் தூர திருஷ்டி மாத்திரமல்ல, வேறு எத்தனையோ வகையான அளவைக் கருவிகள் அநேகம் வைத்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நேரில் பார்த்தால்தான் இவற்றின் தன்மை விளங்கும். சென்னையிலும் கோடைக்கானலிலும் இவ்வித மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப்போய் பார்த்தால்இவற்றின் தன்மை தெரியவரும்.

தூரதிருஷ்டியின் உதவியினால் சூரியன் கிரகங்கள் சந்திரன் முதலியவற்றின் அளவு நிச்சயிக்கப்பட்டது. இவைகளின் தூரமும் அதனால்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முதன் முதல் கலிலியோ தூரதிருஷ்டியின் உதவியால் ஆகாய வெளியைப் பார்த்ததற்குமுன் மனிதர் வானத்திலுள்ள அண்டங்களைப் பற்றி அறிந்ததெல்லாம் அவர்கள் தம் வெறும் கண்களால் பார்த்துத் தெரிந்து கொண்டவையே. அவர்களுக்குச் சூரியன் சந்திரன் இரண்டுமே மிகவும் முக்கியமானவைகளாய்த் தோன்றின. மற்றக் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் எல்லாம் மிகச் சிறியவை என்றும், அவைகள் எல்லாம் பூமியிலிருந்து ஒரே தூரத்தில் இருக்கின்றன வென்றும் எண்ணியிருந்தார்கள். இந்தக் கொள்கைகள் அவ்வளவும் மாறி விட்டன. மேலும், சூரியன் சந்திரன் கிரகங்களின் தன்மையைப்பற்றி ஒன்றும் தெரியாதிருந்தது. தூரதிருஷ்டி உண்டானதினால் இப்போது இவைகளின் தன்மை என்ன வென்பதைத் தெரிந்துகொள்ள நமக்கு இயலும்.

## III
## சூரிய கிரகக் கூட்டம்
## (Solar System)

சூரியன் மத்தியிலிருக்கக் கிரகங்கள் எல்லாம் அதைச் சுற்றித் தத்தமக்கு விதிக்கப்பட்ட பாதைகளில் வழுவாது ஓடிக்கொண் டிருக்கின்றன வென்று முன்சொன்னோம். இப்போது இவைகளின் வடிவம் அளவு சலனம் தூரம் முதலியவற்றைப் பற்றிக் கவனிப்போம்.

ஆகாயத்திலுள்ள சூரிய சந்திர கிரகங்கள் மாத்திரமல்ல, சகலஅண்டங்களும் ஒரே உருவம் உடையனவாய் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த உருவம் உருண்டை, அதாவது பந்துபோன்ற வடிவம். அவ்விதம் உருண்டை வடிவம் என்பதைச் சூரியன் சந்திரன் வட்டமாய் இருப்பதைக் கண்ணால் காண்பதிலிருந்து அனுமானித்துக் கொள்ளலாம். வேறு அத்தாக்ஷிகளும் இருக்கின்றன. ஆனால் அவைகளை எடுத்துக் கூறினால் மிகவிரிவுமாகையால் கூறாது விடுவோம். ஆனால் அவை உருண்டை வடிவம் உள்ளன வென்பதைப் பற்றி சந்தேகம் இல்லை.

இவைகளின் அளவுகள் என்ன என்பதை விசாரிப்போம். பூமியிலுள்ள மக்களுக்குப் பூமி மிகவும் பிரமாண்டமான இடமாய்த் தோற்றுகிறது. மிகவும் பெரியதாய் இருப்பதனால் உருண்டை வடிவம் உள்ளது என்பதையும் நம்ப முடியவில்லை. ஆனால் சூரியன் பூமியைப் பார்க்கிலும் எத்தனையோ ஆயிரமடங்கு பெரியது. விய

முன் மற்றக் கிரகங்களில் எல்லாவற்றிலும் பெரியது. அதன்பின் சனி, யூரேனஸ், நெப்டியூன், பூமி, சுக்கிரன், செவ்வாய், புதன். இவைகளின் அளவைப் பின் வருங்குறிப்பிலிருந்து சரியாய்த் தெரிந்து கொள்ளலாம். இவை ஒன்றற்கொன்று பருமனில் எவ்வளவோ வித்தியாசமுள்ளன வென்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சூரியன் குறுக்களவு | 866540 | மைல் |
| புதன் ,, | 2765 | ,, |
| சுக்கிரன் ,, | 7826 | ,, |
| பூமி ,, | 7918 | ,, |
| செவ்வாய் ,, | 4332 | ,, |
| வியாழன் ,, | 87380 | ,, |
| சனி ,, | 73125 | ,, |
| யூரேனஸ் ,, | 34900 | ,, |
| நெப்டியூன் ,, | 32900 | ,, |

சந்திரன் கிரகங்களுள் ஒன்றாகச் சேர்க்கப்படாததினால் அதன் அளவு மேற்குறிக்கப்படவில்லை. சந்திரன் பூமியைச் சுற்றி ஓடும் ஒரு உபக்கிரகம் என்று முன்னே சொல்லியிருக்கிறோம். சந்திரனைப்போன்ற உபக்கிரகங்கள் வேறு சில கிரகங்களுக்கும் உண்டு. இவைகளைப்பற்றிப் பின்னால் சொல்லுவோம். சந்திரனுடைய குறுக்களவு 2163 மைல்.

சூரியனும் கிரகங்களும் உருண்டை வடிவமான பிரமாண்டமான அண்டங்கள் என்பது அறிந்தோம். இவைகள் ஒன்றிலிருந்து மற்றொன்று நிற்கும் தூரம் என்ன? இவைகளின் அளவு நமது மனதிற்கு அடங்காததாயிருக்கிறது. ஒருமைல் என்று சொல்லும்போது அதைக் கிரகிக்க முடிகிறது. நூறுமைல் என்றால் கிரகிப்பது கஷ்டமாய் இருக்கிறது. ஆயிர மைல் என்றால் அது இன்னும் கஷ்டமா யிருக்கிறது, பதினாயிரம் மைல் என்னும்போது அது எவ்வளவு என்பதை உணரும் சக்தி எங்களுக்கு இல்லை. ஆனால் பாவனையால் ஒருவகையாய் உணர்ந்து கொள்ளலாம். நாம் புகை வண்டியில் பிரயாணம் பண்ணுவதாய் எண்ணி அவ்வண்டி மணியொன்றிற்கு 50 மைல் வீதம் தங்காது ஓடுவதாயிருந்தால் 10000 மைலை 8 நாள் 8 மணி நேரத்தில் சென்று முடிக்கலாம். சாதாரணமாய்ப் புகைவண்டிகளில் ஆயிரமைல் தூரம் செல்வதற்கு இரண்டு நாளாகின்றது. அப்படியானால் பதினாயிரம் மைலுக்கு இருபதுநாட் செல்லும். இந்த விதமான பாவனையில் ஒருவகையாய் இந்தத் தூரங்களைக் கிரகிக்கலாமே யல்லாமல் உண்மையில் கிரகிக்க முடியாது. அண்டங்களின் தூரங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது இந்தப் பாவனையும் பிரயோசனப்படாது. சூரியனிலிருந்து கிரகங்களின் தூரங்களைக் கீழே குறிக்கிறோம். இவை மனதுக்கு அடங்கத் தக்கவையா வென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| புதன் ஏறக்குறைய | 36000000 | மைல் |
| சுக்கிரன் ,, | 67200000 | ,, |
| பூமி ,, | 92900000 | ,, |
| செவ்வாய் ,, | 141500000 | ,, |
| வியாழன் ,, | 483300000 | ,, |
| சனி ,, | 886000000 | ,, |
| யூரேனஸ் ,, | 1781900000 | ,, |
| நெப்டியூன் ,, | 2791600000 | ,, |

இதிலிருந்து சூரியகிரகக் கூட்டம் ஆகாய வெளியில் மிகவும் ஒரு பெரிய பாகத்தை அடக்கி இருக்கிறது என்னும் எண்ணம் தோன்றலாம். உண்மையில் அப்படியில்லை. இதன் எல்லைக்கப்பால் நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. அவைகளின் தூரங்களை எண்ணும்போது மனம் சுழலுகின்றது. அவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது பூமி சூரியன் கிரகங்கள் எல்லாம் ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடக்கின்றன. நக்ஷத்திரங்களைப்பற்றிச் சொல்லும்போது அவைகளின் தூரங்களையும் கவனிப்போம்.

## வாய்மையும் திருவள்ளுவரும்

வாய்மையும் திருவள்ளுவரும் என்று தலைப்பிட்ட இச்சிறு கட்டுரையில் வாய்மை என்றால் என்ன? முன்னோர் அதை எவ்வாறு போற்றிவந்தனர், என்ற அதன் பெருமையும், இக்கருத்தில் ஆசிரியர் தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனாரது மனப்பான்மையும் கூறப்பட்டுள்ளன. வாய்மை என்ற சொல்லில் அமைந்த பொருளைக்குறித்துக் கூறியபிறகு, நாயனாரது திருவாக்கிற் சென்று நோக்குவோம். வாய்மை என்னும் சொல் வாயின்து தன்மை என்று பொருள்படும். இங்குத் தன்மை ஆகுபெயர். அச்சொல் மெய்மை அல்லது உண்மை என்னும் பொருளில் ஆன்றோரால் வழங்கி வரப்படுகின்றது. இதனால் மனிதர் வாயின் வழியாக இயற்கையில் தோன்றி வெளிப்படுவது வாய்மையே என்பது விளங்கும். ஆதலால், யாவரும் மனதின் தொழில் அடியாகப்பிறந்து நாவெனும் பூவினில் தவழ்ந்து இசை உருவாகப் பரந்து ஒலிக்கிற உண்மையையே கூறவேண்டும்.

உலகத்தில் தோன்றி அழியும் தன்மையான எவ்வகைப் பொருளுக்கும் சொல்லுக்கும் முறையே மறுதலைப் பொருளும் சொல்லும் உண்டு. இதற்கு எதிர்மறைப் பெயர் என்பர் ஆன்றோர். இக்கொள்கைப்படி வாய்மை என்னும் மொழிக்கும் எதிர்மொழி யுண்டு. அதன் (வாய்மையின்) எதிர்மொழியையே பொய்மை என்று கூறப்படும், வாயினிடமாக வரும் ஒவ்வொரு சொல்லும் உண்மைக்கு மாறுபட்டிருக்கக் கூடாதென்று சிறந்த மானிட இலக்கண அறிஞர் கூறியிருக்கின்றார்கள்.

மனிதக் கூட்ட வாழ்க்கைக்கு வாய்மைதான் இன்றியமையாது முதலில் வேண்டும். ஓர் மனோதத்துவ இலக்கணக் கலைஞர், "எந்த தேசத்தவர்,—எந்த நாட்டவர்—எந்த ஊரவர்—எந்த வீட்டவர் பொய்மை பேசுவதைப் புகழ்க்கேடு என்று கருதார்களோ, அவ்வவர்கள் நாளடைவில் வலிகுன்றி மெய்பேசும் மற்ற நாட்டவர்க் குட்பட்டு அடிமைகளாவார்கள்" என்று கூறியிருக்கின்றனர். இதற்குச் சான்றாக இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி ஸ்காட்லாண்டு முதலிய தேசசரிதங்களும், நமது சங்க இலக்கியங்களும் "உலகத்தில் சுத்த வீரர்களாயிருந்த அனைவரும் மறந்தும் வாய்மையில் சிறிதும் பிழைத்திலர்" என்று கூறுகின்றன.

இப்படிப்பட்ட இயற்கையான வாய்மையின் பெருமை நமது இதிஹாஸாதி புராணங்களில் பற்பல விதமாகக் கூறப்பட்டுள்ளது. அவையனைத்தையும் ஒருங்கு சேர்த்துச் சொல்வது சுருங்கச் சொல்வதற்கு சாத்தியமன்று. வாய்மையின் பெருமையைச் சுருங்கச் சொல்லுமிடத்து அதன் எதிர் மொழியாகிய பொய்மையின் சிறுமையைக் கூறினால், இத்துணைத்தெனத் தெளிவாக விளங்கும். ஒருவன் இயற்கைக்கு மாறான பொய்மையை உரைத்து வருவானாகில் அவன் இம்மையில் மனிதர்களால் இகழப்பட்டு நம்பிக்கை யற்றவனாவதுமன்றி மறுமையில் அவன் நரகதியிலும் இடம்பெறான் என்பதும் திண்ணம்.



பொய்யுரைத்தே வரவேண்டுமென்று திட்டம் செய்து கொண்ட ஓர் கூட்டத்தாராயினும் அவர்கள் தம்முள் ஒத்திருக்க வேண்டுமானால், அவர்கள் தத்தமக்குள் மெய்யுரைத்தே வரவேண்டும். அங்ஙன மின்றேல் அவர்கள் ஒருவருக் கொருவர் மாறுபட்டுக் கேடுறுவர். பொய்யுரைப்பவன் எனப் பெயர்கொண்ட ஒருவன் சொன்ன உண்மையையும், வாய்மையுடையோர் தக்க பொழுதிலும் கொள்ளார்.

"கெட்டிக்காரன் பொய் எட்டு நாள்" என்றபடி, ஒருவன் எவ்வாறு பொருந்தும்படி பொய் சொல்லி உண்மையை மறைத்து வந்தாலும் நீரில் எண்ணெய் போல் வெளிவந்து விடும். அதனால் ஊதியமும் அடைய மாட்டான். பொய்யை ஆன்றோர்கள்,

"பொய்யே—குறளை கடுஞ் சொல் பயனில்
சொல், எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்"

என, பத்துத் தீவினைகளில் சொல்லி தோன்றுவன நான்கில் முதன்மையாக வைத்திருக்கின்றார்கள்.

சான்றாக; ஒவ்வொரு கல்வியிலும் திறமை வாய்ந்த அறிஞர்க்குத் தக்க பரிசளிக்கும் தனவந்தனிடம் ஒரு பொய்யன் சென்று, "செல்வரே! யானும் ஓர் துறையில் வல்லேன். அத்துறையில் என்னில் மிக்காரிலர். யாதெனின்—எனக்கு அறிவு தோன்றியது முதல் யான் இதுகாறும் ஒரு மெய்யாவது பேசாது பொய் பேசியே கழித்து வந்தேன். ஆதலால் இன்னும், என்னைச் சோதித்து எனக்குத் தக்க பரிசளிக்கவேண்டு" மெனக் கேட்டான். அதைக் கேட்டுச் செல்வன்! "வாய்மையில்லோய்! நன்று சொன்னாய்—நீ பொய் பேசுவதில் வல்லமையுடையாய் என்பது மெய்யே யாதலால், உனக்குப் பரிசளிக்கவேண்டுவதும் உண்மையே;-இப்பொழுது நீ பரிசுபெறும் சமயத்தில், "நான் இதுகாறும் பொய் சொல்லியே வந்தேன்" என்று உண்மை சொல்லிவிட்டாய்-ஆதலால், நீ பரிசடையத் தக்கவனல்லன்" எனச் சொன்னார். இதைக்கேட்ட அனைவரும் நகைத்தனர்;—பொய்யனும் நாணி வறிதே சென்றான்—என்னும் உத்திக்கதையை அனைவரும் அறிவர்.

மேற்கூறிய காரணங்களால் வாய்மையைக் கையாளுமொருவனை உலகத்தார் போற்றுவர்:—அவன் வாய்ச்சொல்லை அறிவுடையோர் தடையின்றிக் கொள்வர்;—அவன் எங்குச் சென்றாலும் பெருமையே அடைவான்;-தக்கசமயங்களில் ஊதியத்தையும் தடையின்றிப் பெறுவான்;—இதுபற்றியே ஆன்றோர்,

"வாய்மையின் வழாது மன்னுயிரோம்புனர்க்கு
யாவையுமுண்டோ எய்தாவரும்பொருள்".

என்று கூறியிருக்கின்றனர். நிற்க;—

இவ்வாய்மையில் ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் எத்தன்மையர்? அவர் கொள்கை என்ன? என்பதைக் கவனிப்போம்.

இவரது கதைகளும் கொள்கைகளும் கர்ண பரம்பரை யாதலால் பல்லோர் பலவாறு கூறுவர். அவைகளையெல்லாம் விடுத்து ஈண்டு அகச்சான்றுகளை மட்டும் எடுத்துத் தொகுத்துக் கூறுவதே நலமாகும்.

எம்மதத்தோரும் சம்மதமாம்படி உலக உண்மைகளைத் தமிழ் மறையாக அருளிச் செய்த ஆசிரியர் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாருக்குச் "செந்நாப் போதார்" என்ற பெயரும், அவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளுக்குப் "பொய்யா மொழி" என்னும் பெயரும் புனிதத் தன்மை பற்றியே யாகும். தொல்லாசிரியரும் இந்நூலாசிரியரையும் இவர் மொழிகளையும் பலவிடத்தும் "பொய்யில் புலவன், பொருளுரை" என்றும் பலவும் கூறி யிருப்பதால் இவ்வாய்மையாளர் தூய்மையை நன்கறியலாகும். ஓர் நூலாசிரியரது பழக்க வழக்கங்களை அறியவேண்டுமானால் அதற்குச் சோதனைக் கருவி அவரது எச்சமேயாம். இதுபற்றியே நமது ஆசிரியரும்,

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்றார். தற்பொழுது நாயனாருக்குப் பிறகு அவரது எச்சமென எஞ்சி நிற்பது அவரால் இயற்றப்பட்ட நூலேயாகும். ஓர் நூலாசிரியரின் எச்சமாகிய நூலிற் கூறியவொவ்வொரு துணிவையும் எடுத்து நோக்குங்கால் தெரியக் கூடியதே, நூலாசிரியரது கொள்கையாம். அவ்விதமே திருவள்ளுவ நாயனார் வாய்மையை எவ்வாறு கொண்டொழுகலானார் என்பதே ஈண்டு நோக்கமாகும்.

ஆசிரியர் திருவள்ளுவ நாயனார்க்கு உலகத்தில் தோன்றும் பல கொடிய செய்கைகள் பலவற்றில் முதன்மையாக விலக்குள்ளன யாவையெனின், உயிர் வதை செய்தலும் பொய் பேசுதலுமாம். இவ்விரண்டையும் சேர்த்து ஒரு குறளில் செவ்வனே விளக்கித் துணிவு கூறுகின்றார். எங்ஙனமெனில்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" என்பதாம்.

ஆசிரியர் கொல்லாமையைக் கூறவேண்டிய அதிகாரத்தில் கொல்லாமையையும் பொய்மையையும் விலக்கிக் கூறுகிறார். இதனால் இவருக்கு இவ்விரண்டு செய்கைகளிலும் (கொலையிலும் பொய்மையிலும்) எத்துணை விலக்கு ஏற்பட்டிருக்கவேண்டும்?

இவர் வாய்மையைக் கூறுமிடத்தில் ஏனை முடிவுகளைப் போல் கூறாமல் மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றார். பிறவிடங்களில் "தீய வழுக்கியும் வாயாற் சொலல்" என்றும் பிறவும் குறித்துச்சென்ற ஆசிரியர், வாய்மையில்;

"யாமெய்யாக்கண்ட வற்றுளில்லை; யெனைத்தொன்றும்
வாய்மையி னல்லபிற"

என்றார். இம்முடிவினால் இவர்க்கு உண்மையைக் கையாளுவதிலும் ஆளச் செய்வதிலும் எத்துணை பற்றுதல் இருந்திருக்க வேண்டும்! வாய்மை யுரைத்தால் ஏனை அறங்கள் இயற்றா வழியும் நன்மையாகும். புறந்தூய்மை நீரினால் அமைதல்போல் அகம் தூய்மை வாய்மையால் உண்டாகும். பொய்மை உரைத்தால் பிறவறங்கள் செய்த வழியும் அவ்வறங்கட்கேற்ப பயன் இன்றாகும்.

இங்ஙனம் சிறப்பித்துக் கூறப்படும் வாய்மையின் இலக்கணத்தை ஆசிரியர்,

"வாய்மையெனப் படுவது யாதெனின் யாதொன்றும்
தீய்மை யிலாத சொல்;"

என்று கூறுகின்றார். அதாவது பிறிதோர் உயிர்க்குச் சிறிதளவேனும் தீங்கு உண்டாகாத சொற்களைச் சொல்வதே வாய்மையாகும். பிறனொருவன் தன் சூழ்ச்சியால் முற்பகல் கேடடைந்தால் தன்னை அறக்கடவுள் பிற்பகல் கெடுத்துவிடும் என்ற கொள்கையையும் ஆசிரியர் நினைத்துக் கூறுகிறார்.

உலகத்தில் மக்களாகப் பிறந்தவர்க ளனைவரும் பிறந்ததன் பயனாகிய புகழை யடையவேண்டு மென்பதை;

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றும், அப் புகழ்தான் ஒருவருக்குப்பின் கெடாது நிற்குமென்பதை,

"உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது [ஒன்றில்"

என்றும் பிறவும் கூறுகின்றார். இப்புகழ் யாரிடம் நிலை நிற்கும்? எக்காரியத்தில் ஈட்டிய புகழ் நிலைபெறு மென்பதை;

"இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும்புகழ்"

என்றும் கூறுகிறார். இவ்விதமாகத் தேடிய நிலை நிற்கும் புகழும், வாய்மை பேசுகிறவனிடத்தில் நிலை நிற்கும் புகழுக்கு ஈடில்லை என்று,

"பொய்யாமை யன்ன புகழில்லை ; பொய்யாமை
யெல்லா அறமும் தரும்."

என்ற குறட்பாவினுல் தமது உள்ளீட்டை வெளியிடுகின்றார். இஃது உண்மையன்றோ? இவ்வருமைக் குறட்பாவைப் படித்த பொழுதிலேயே நம்முடைய மனது நம்மைச்,

"செய்மையண்மையில்உயிர்க்கொரு துணையெனச்சிறந்த
வாய்மையால் அகம் தூய்மையாம், மற்றிலை புறத்தைத்
தூய்மை செல்வது நீரலால் சொல்லின் வேறுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பு எமக்கு [அறிதி"

என்றும் ;

"எம்மை யாழ் வயிற்றடக்கி மீட்டு உமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நாகு உய்க்கினும் மெய்ம்மையை விடேமால்"

என்றும்;

"கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேம்"

என்றும்; பிறவும் உறுதியாகக் கைக்கொண்ட அரிச்சந்திரன் கதையிலும் ;

"வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்,
தூயவன்"

என்றும் ;

"வாய்மை யென்னு மீதன்றி வையகம்
தூய்மை யென்று மொன்றுண்மை சொல்லுமோ"

என்றும் கூறுகிற இராமயணத்திலும்,

"எண்ணிய பொருள்கள்யாவும்
இயற்றிய தவமும், ஏனைப்
புண்ணிய மனைத்தும் சேரப்
பொய்மையாற் பொன்றுமன்றே"

என்கிற பாரதத்திலும் பிறவும் வாய்மையைக் குறிக்கு மிடங்களிலெல்லாம் இழுத்துத் தள்ளி விடுகிறதன்றோ! இம்மட்டோடு குறளுக்குத் திரும்பி வந்து ஒரு விஷயம் குறிப்பிடுவோம்.

ஒரு சாரார் மனம்போனபடி யெல்லாம் பொய்மையே பேசித் தாம் பொருள் தேடுவது மன்றி "பசுவைக் கொன்று செருப்புத்தானம் செய்வது' போல பிறர்க்கும் கொடுக்கிறார்கள். 'எதற்கு வாய்மையின் வழி பிழைத்துப் பொருள் ஈட்டி வழங்குகிறீர்?' என்று வினவினுல் அதற்கவர்கள் ஆசிரியர் திருவள்ளுவ நாயனுரே

"பொய்மையும் வாய்மை யிடத்த ; புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

குற்றமில்லாத நன்மையைக் கொடுக்குமாயின் பொய்யும் மெய்யேயாகு மென்று கூறியிருக்கின்றனரே ; அங்ஙனம் ஈட்டிய பொருள் எமக்கும் பிறருக்கும் எத்துணைப்பயன்படுகிறது! "நாய் விற்றகாசு குரைக்குமா? பொய்பேசி ஈட்டிய பொருள் குற்றமாகுமா? அதுவன்றி நன்மைக்கும் செலவு செய்கின்றோமே என்று சாமாரி போல் சொல்மழை பொழிந்து பழியை ஆசிரியர் பொய்யாமொழியார் மாட்டுச் சுமத்துகின்றனர். ஒரு சாரார் ஆசிரியர் வாய்மை பேசுமிடத்துச் சிறிது வழுவலுற்றார் என்பர். இவ்விரு கூற்றாரும் இவ்வாசிரியர் கொள்கையையும் இக்குறளின் உண்மைப் பொருளையும் அறியார் என்றே கூறலாம். ஆசிரியர் முதலில்,

"யாதொன்றும் தீமை யில்லாது சொலல்"

என்றும் ;

"மறந்தும் பிறன்கேடு சூழற்க" என்றும் பிறவும் கூறிப் பிறகு மறுத்து இங்ஙனம் பொருள்படக் கூறுவார் என்பது பொருத்தமன்று. ஆதலின் ஆசிரியர் கொள்கை யாவது, உண்மையில் நடந்த சங்கதியை வலிவிற் சொல்லுமிடத்து ஒருவன் கேடுறுவானுயின் அவ்விடத்தும், உண்மையில் நடந்த சங்கதியைச் சொல்லாதிருப்பின் அதனுல் ஒருவர்க்குப் புரைதீர்ந்த நன்மை விளையுமாயின் அவ்விடத்தும் நடந்த மெய்யைச் சொல்வது குற்றமென்பதே யாகும். இதற்குப் பொய் சொல்ல வேண்டுமென்பது ஆசிரியர் கொள்கையன்று, வாய்மையிற் சிறிதும் வழுவினுரு மல்லர். தமிழ் வேதமெனச் சிறப்பித்துக் கூறும் திருக்குறளில் வாய்மையைக் கூறுமிடத்துத் தக்க சமயங்களில் பொய் கூறலாமெனச் சிறப்புவிதி கூறுவரோ? தவிர, உலகதருமங்களை (133) அதிகாரங்களாக வகுத்துக் கூறின ஆசிரியர் பொய்மையை ஆங்காங்கு மறுத்துக்கூறிச் சென்றனரேயன்றித் தனி அதிகாரம் வகுத்திலர். அதன் கொடுமையான கெடுதியை நினைத்தோ, அல்லது நாணினரோ அறியோம். இதனுல் இவருக்குப் பொய்மையில் தோன்றும் அச்சமும் விலக்கும் வாய்மையில் இருக்கிற பற்றும் வெளியாகின்றன.

R. முத்தையர்,
தமிழ்ப்பண்டிதர், திருநெல்வேலி.

# மலர் வனம்.

## வல்வரவு வாழ்வார்க் குரை.

அன்னையறியின் என்செய்வேன் என்றும், பின்னை அயலார் கண்டால் தூற்றுமலர்க்கும் அஞ்சியஞ்சித் தன தன்புனைக் கனவினில் காணுமப்போதே மறைய களிப்பு உறையும் வண்ணம் பின்னிருக்கும் பிரிவையுன்னிப் பேதுற வெய்தும் மங்கை, அன்னையேயறு அனைவருமறிய மணவினை முடிந்தபின் களிப்பெனும் கடலிற்கோர் கரைகண்டிலளாய் வாழ்வினில் வைகுவள். இவ்வாறு தலைவனும் மனைவியும் காற்றேனும் தமக்கிடையே கடக்கப்பொறுத இல்வாழ்க்கையி னின்பத்தைத் துய்க்கும் காள், ஒருவரழகை ஒருவர்பருகி இருவருக்குந் தெவிட்டாக் கண்கள் கொட்டுந்தோறும் இமைபுகுந்து அக்காட்சியை இடையிடை தடுப்பதற் காற்றா மறுக்கமல்லால் பிறிதொரு துயரும் எய்திலராவார். சிலபகல் இன்வகைச்செல்வதன் முன்னர்க் குலமகன் மனைவியை யன்பொடு கூவி, "இலனென இரப்பவர்க் கெம்புந விளையேன், மலர்தரு பொருளினை மன்னினன் செல்வேன்," என்னின் பேதையவள் நிலை என்னாம்! பிரிவெனுஞ் சுடுசொற் கேட்டு வைவாள் இப்பெண்மை அழுவபடு மெழுகின் பாவையெனல் ஒன்றுது, உடனிருக்க அகம் கரையும் பாவையொன் றிலாமையால்.



'நிற்பிரிவேன் என்றுரைத்த வன்னெஞ்சன் முகத்தினை எதிர் நீபாராய்' என மறைப்பனபோல் நீர்ப்படலம் பரந்தவள் கண்களை மறைக்கும். "ஐய இது தகுமோ!" என்பதன் மேல் வாயெடுத்தசொல் வேறொன்றும் வாராது. அண்ணலோ தனதின்னுயி ரனையாள் நினைப் பதனைத்தையும் தானும் நினைந்து நைவானுனுலும் ஒரு வண்ணம் மனந்தேர்ந்து, குழைந்தபூங் கொம்பன்ன மெல்லியல் மாதரான் காந்தளங்கைகள் பற்றித் தன் தாமரைக் கரத்துட் சேர்த்து, "இனியாய், இரவலர்க்களித் தளித்தென் னைப்பருஞ் செல்வம் யாவும் தேய்ந்து போயது. இனிவந் திரப்பவர்க்கு என்செய்வோம். எற்பவர்க்கொன்று கொடுப்பதற் கில்லையென்று ஈயாதமை தல் இளிவல்லவா. ஆதலாற் காடும் மலையும் கடந்துநான் நாடுபல நடந்தேனும் பெரும் பொருள் ஈட்டிவந்து, வறியரையும் விருந்தினரையும் மகிழ்வித்து நீ மகிழ்வெய்துதற்கு, நின்கை யளிக்கப் பணித்தி ............விடை யெனக்குத் தருதியோ"......என வேண்டுவான்.

இவ்வருஞ் செவ்வியில், தாமேயொரு பூங்கொடியாய்க் கற்பெனுங் கொடிபடரக் கொழுகொம்பும் எனத்தகைய மங்கைமார், நாயகன் வகுத்த அறத்திற்கும் அவன்பால் வைகிய ஆசைக்கும் இடையே சிறிதுபோது ஊசலாடிய தம்மனது முடிவினில் பிரிவதற்கு எவ்வகையும் இணங்காதாகி, அவன் செல்வதை விலக்கச் செப்பும் உரைசில இங்கு எம்முடன் ஒளிந்து ஒற்றுக்கேட்க நண்பர்காள், வம்மின்.

நாடும்பொருளை இகழ்ந்து கூறி விலக்குவாளாய்,

ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மேல்
ஆசை சிறிது மடைவிலமாற்—றேசு
வழுவா நெறியின் வருபொருண்மே லண்ணல்
எழுவா யொழிவா யினி.

[புகழ்கெடாத வழியில் வரத்தக்க பொருளை விழைந்து பிரிகின்ற பெரியோனே. (நீ பிரிய என்னுயிர் நிற்காதாகையால்) எங்களுக்கு உயிரின்மேல்தான் ஆசையும் அருமையும் அதிகம். எவ்வளவு முயன்றாலும் நீ பேசும் அப்பொருள்மேல் ஆசையென்பது எங்களுக்குச் சிறிதும் வரமாட்டேன் என்கிறது, எங்கள் தன்மையிது. நீயோ, இனி அப்பொருள் விரும்பிப் போனுற் போ, இருந்தால் இரு.]

என இடித்துரைப்பினும் போகவே நினைத்தவனுக்குத் துணை செய்வான்போல் பரிகசித்து,— [டெம்

விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே—விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு வாராம லேகு.

[(நீசெல்ல நானிறப்பேன். எம் சுற்றத்தார் சூழ்ந்தழுவார் ஆதலால்) தேனூறிச் சொரிகின்ற பூமாலையையும் அழிகிய வீரக் கழலினையும் அணிந்த பெருமானே, நன்மை விளையுமென்று நீ இன்னும் பொருளையே விரும்பினுயாலுல், எங்கள் சுற்றத்தார் அழுகின்ற அழுகை கேட்பதற்கு முன்னே, உன் போக்கிற்கு இடையூறு வாராமல் போய்விடு]

எனத்துன்பம் நிலவிய புன்னகை புரிந்து பின்னும் பகர்வான் :— [மேல்

மல்லணிந்த தோளா யிதென்கொலோ வான்பொருண்
செல்க விரைந்தென் றுளந்தெளிந்து-சொல்லுதற்கே
என்று முயல்வலியா னேகனீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல்.

[திரண்ட தோள்களை யுடையவனே, இதென்னவிது! சீக்கிரத்திலே நீ விரும்பும் நல்ல பொருள்நாடிச் செல், என்று மனம் தேர்ந்து முயன்று முயன்று சொல்வதற்கே பார்க்கின்றேன். அனுல் சொல்லவரும் போது நீ செல்லாதே என்றே என் வாயில் வார்த்தை வருகின்றதே]

தன்சொல் எதுவாயினும் அவனதற்கு உடன்படுவானல்லன் என்பதோர்ந்து பிரிவினுல் தான்பட விருக்கும் துயரேனும் எதுவென்று அவனுணருமாறு, உபாயம் ஒன்று கேட்பான்போல் விலக்க எண்ணி,

இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே யிளவேனில்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தா-லன்னோர்
தமக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர்
யெமக்கின் றருள்புரிந்தே யேகு. [விஞ்சை

[எனது இன்னுயிரைக் காத்து அளிப்பவன் நீயன்றி யாருளர். நீ அகலும் அற்றம் பார்த்துநின்ற மன்மதனும் எமனும் எனதுயிரை உண்ண வந்து சேர்ந்தால், அவர் கண்ணிற்கு நான் தென்படாதபடி ஒரு மந்திரத்தை இன்று உபதேசம் செய்தருளிப் பின் போவாய்]

என்று பரிவு கூர்ந்து நின்றாளேனும் நாயகன் போவதே கடை பிடித்திருத்தல் நோக்கி வெகுளி கொள்வதும் இவட்கு இயற்கையே.

வண்ணங் கருக வளைசரிய வாய்புலரா
எண்ணந் தளர வெதிர்நின்று—கண்ணின்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்விரால்
யாதும் பயமிலேம் யாம்.

[மேனிநிறம் மாறிக் கருகவும் கைவளை கழன்று உதிருமாறுஉடல்இளைக்கவும், வாய் உலர்ந்து போகவும், மனந்தளர்ந்து அயரவும் எங்களுக்கு நேரும்படி நீர் கருணை சிறிதுமின்றி எதிர்நின்று பொருளாசை பிடித்தலைய, எம்மை வெறுத்துப் போவீராயின் போம்! எங்களுக்கொன்று மதனுல் பயமில்லை, போம்]

நீ போவதால் எங்கள் குடிகெட்டிடா தென்று இன்னவாறு விளம்பி, முருக்கலரனைய முகிழிதழ் துடிப்ப நெற்றியில் முத்தரும்பக் கட்கடைசிவந்து நீருகுப்ப நின்றாளையவள் கணவன் பரிவினோடும் இரங்கி நோக்கிச் "சினத்திலும் என் செல்வி, நின்றன் செவ்வி சீரிதே. ஆருயிரணங்கே, அகங்கரைந் தழேல். அன்பிலாதே நிற்பிரிந்தகல்கின்றேனென நீ நினைப்பதுவும் யான்செய்த தவப் பயன் சிறிதே போலும். அழேல், அம்ம, திங்கள் பல கழியாமுன் யான் திரும்புவல். நின்னனைய கற்பினுர் நிகழுமின்னுட்டில் நெடுவானம் பொய்க்காது. இனிக் கார்ப்பவரும் வருங்கால் யானும் அருகிதியே, வந்திடுவல். அதுகாறும் இவ்வயின் காதலி நீ, துயராறி வாழ்ந்திடுவாய்," என முகத்தை முகமோடணைத்து வேண்டினுன். வேண்டினுலென், வேண்ட வேண்ட அவளுக்கு வெகுளியென்ற துயரமே மிகுகின்றது. அணைந்த முகத்தை நொய்தி னகற்றி

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

[போகாதிருப்பதானுல் அதை எனக்குச் சொல். நீ விரைவில் வருவேன் என்பதே வார்த்தையானுல், அது காறும் வாழ்ந்திருப்பார்க்குப் போய் அதைச் சொல்]

என்னலோடும் செல்லல்என இவளும் விலக்கலென அவனும் ஒருவரை யொருவர் தம்கண்களால் எதிரெதிர் நணியிரப்ப உயிர்ப்புவீங்குமோர் ஓவியச்செய்தியே போல் காதலிவ்விருவர் நின்றனர்.

"மதுகாம்"

# வர்த்தமானம்.

**ராஜாங்க சபை:**—டில்லி ராசாங்க சபையார் சைமன் கமிஷனோடு சேர்ந்து வேலை செய்யவேண்டு மென்னும் தீர்மானத்துக்கு வந்திருக்கிறார்கள்.

***

**சென்னைச் சட்டசபை:**—சென்னைச் சட்டசபை திங்கட்கிழமை கூடிற்று. மந்திரிமார்கள் பேரில் நம்பிக்கையில்லை என்கிற ஒரு தீர்மானத்தைச் சபையில் விவாதிக்க விருக்கிறதாக ஒரு வதந்தி ஏற்பட்டுள்ளது. இதைப்பற்றிச் சட்டசபைக் கட்சிகள் எல்லாம் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

***

**கல்கத்தாவில் பகிஷ்கார வேலை:**—கல்கத்தாவில் பிரித்தானியப்பொருட்களை முற்றும்பகிஷ்காரம்பண்ண வேண்டுமென்ற தீர்மானம் செய்து அதற்காகவேண்டி ஒழுங்குகள் செய்து வருகிறார்கள். சுபாஷ் பாபு இதை வங்காளம் முழுவதிலும் பரவச் செய்வதற்கு 10000 வாலிபர்களை முன்வரும்படி கேட்டிருக்கிறார்.

***

**சைமன் கமிஷன்:**—கமிஷனர்கள் கல்கத்தா லட்சுமணபுரி காசி முதலிய விடங்களுக்குப் பிரயாணம் பண்ணிப் பின் குண்டூர் ஓங்கோல் முதலியவிடங்களைப் பார்த்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை காலை சென்னைப்பட்டினம் வந்தார்கள். சென்னையில் ஹர்த்தால் நிறுத்தப்பட்டிருந்தாலும் கடைகள் அதிகமாய் மூடப்பட் டிருந்தன. போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. வெளியிடங்களிலிருந்தும் போலீஸ்காரர்களைக் கொண்டு வந்து தெருக்களில் கூட்டங் கூட்டமாய் நிறுத்தியும் மோட்டார் பஸ்களில் சுற்றிக்கொண்டு மிருந்தனர். கமிஷன் பட்டணத்தைவிட்டுப் போகும்வரையில் இதே மாதிரியாய்த்தானிருக்குமாம்.

***

**கூட்டுத்தொழில்:**— (Co-operation) சேலம் ஜில்லா கூட்டுத்தொழில் சபையின் ஏழாவது வருஷக் கூட்டத்தில் ஸ்ரீமான் திவான்பகதூர் R. ராமச்சந்திர ராயர் C. I. E. தலைமை வகித்துச் செய்த பிரசங்கத்தில் பின் வருவன அவர் எடுத்துச் சொல்லிய முக்கியமான விஷயங்கள் சிலவற்றின் சாரம்:—முதலில் கூட்டுத்தொழில் என்னவென்பதைப் பற்றி ஆராய்வோம். கூட்டுத்தொழில் பலர் சேர்ந்து ஒருமித்து ஒரு வேலையைச் செய்தல் என்பது சொல்லின் பொருள். ஆனால் இச் சொல் இதைத்தவிர வேறு கருத்துக்களை அடக்கியிருக்கிறது. இந்தக் கருத்தைமாத்திரம் குறிக்கும் வார்த்தை ஒன்று உபயோகத்துக்கு வாராதது குறையேயாகும்.

கூட்டுத்தொழில் மனிதர் முன்னேற்றத்துக்கு வதவான படியைச் சுட்டிகிற்கின்றது. ஆனால் நமது நாட்டாரிடம் அதை ஒரு வேடிக்கையான விளையாட்டுப் பொருள் போல எண்ணும் தன்மை இருக்கிறது. இங்குமங்கும் சில பாங்கிகளும் சில ஸ்டோர்களும் சங்கங்களும் கமிட்டிகளும் இருந்தால் கூட்டுத்தொழில் முயற்சி அதற்குள் அடங்கிவிட்டதென்று எண்ணுகிறார்கள். கூட்டுத்தொழில் இதிலடங்கி விடவில்லை.

கூட்டுத்தொழில் சிலருக்கு மாத்திரம் சௌகரியம் தருவதன்று. நிலத்திலும் கைத்தொழிற் சாலைகளிலும் கஷ்டப்பட்டு உழைக்கிற தொழிலாளர்க்கு அவர்கள் வேலைக்குத் தகுந்த பிரதிப் பலன் கிடைக்கும்படி செய்வதற்கும் மனிதருக்குச் சுயநம்பிக்கையையும் மனிதர் எல்லாரும் சகோதரர்கள் என்ற அறிவையும் கொடுப்பதற்குமாக ஏற்பட்டிருக்கும் ஓர் உலகஇயக்கம் இது. சிலரிடத்தில் ஏராளமான பணம் சேர்வது தப்பிதம் என்பதும் சிலரே ஏராளமான நிலத்தை உடைமைகொள்வதும் நாணயங்களின் விலைமதிப்பை இஷ்டப்படி மாற்றிப் பொருளுடையாரை மேலும் செல்வராக்கிப் பொருள் இல்லாதவர்களை ஏழைகளாக்குவதும், சுயநன்மை கருதிக் கிராமங்களில் வீடுகள்தோறும் நடந்துவரும் சிறு கைத்தொழில்களை நாசமாக்கி விடுவதும் அரசாங்க உத்தியோகஸ்தரும் மற்றும் சில படித்த தொழிலாளரும் (learned profession) வருந்தி உழைப்பவனுக்குச் சரியான சாப்பாடுகூடக் கிடைக்காமலிருக்கத் தமக்குத் தாமே கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் உயர்ந்தஊதியங்களும் ஆகிய இவைகளெல்லாம் சரியல்லவென்பதும் கூட்டுத் தொழிலியக்கத்தினால் உண்டான உணர்ச்சி யாகும்.

இந்த இயக்கத்தை எல்லாத் தேசத்தாரும் கைப்பற்றிச் சித்தியடையலாகுமா என்பதைப்பற்றிச் சந்தேகம் இருக்கலாம். ஆனால் எந்தத் தேசத்தார் இதைக் கைப்பற்றாது விடுகிறார்களோ அவர்கள் மனித முன்னேற்றத்தின் மேற்படியைக் காணமாட்டார்கள். ஏனென்றால் இவ்வுலகம் இனிமேல் கூட்டுத்தொழில் செய்யும் மனிதருக்கே உரியதாய் விடும்.

இது பொருள்உலகை மாத்திரம் எதிர்த்து நிற்கவில்லை. சிறந்தகுணசீலரானவர்கள் இதன் மூலமாய் மற்றவர்களுக்காகப் பாடுபட்டு இயற்கை எல்லாம் ஒன்று என்னும் பெரியஉண்மையை வெளிப்படையாகஎடுத்துக் காட்டுவதற்கும் இது ஏதுவாய் இருக்கிறது. வருந்தி வேலை செய்பவனுக்கு அவன் வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்குமானால் அவன்இப்போதுசெய்கிறமுயற்சியைப் பார்க்கிலும் அதிகமான முயற்சி செய்வான். இப்போது இருக்கிற நிலைமை என்னவென்றால் ஒருவன் வேர்வை விட்டுக் கஷ்டப்படவும் அவன்வேலையின் பயனைச் சும்மா விருக்கிறவன் அனுபவிக்கவும்உண்மையில் உழைப்பவன் மனம் நொந்துபோகவும் வேண்டியிருக்கிறது. கூட்டுத் தொழிலுக்கு இலக்காகவுள்ளது என்னவென்றால் ஒவ்வொருவனும் அவன் செய்யும் வேலைக்கு ஏற்ற கூலி பெறச் செய்வதே. அவ்விதம் வேலைக்குத் தகுந்த பிரதி பலன் கிடைக்குமாயின் ஒவ்வொருவனும் அதிக ஆர்வத்தோடு தன்வேலையைச் செய்வான். இதன்பயனாக உலகத்தில் பொருள் ஏராளமாக உண்டாகும். இது மாத்திரமன்று. கைவேலை செய்வதன் பெருமை எல்லார் மனதிலும் நன்றாய்ப் பதியும். அதனால் ஒவ்வொருவனுக்கும் சுயநம்பிக்கையும் உண்டாகி தன் வயிற்று வளர்ப்புக்கு இன்னொருவனைக் கெஞ்சவேண்டிய அவசியம் அற்றுப்போகிறது. அப்போது பொருள்கள் மூலமாய் தேக சுகம் அடையவேண்டுமென்று விரும்புகிறவன் கை வேலை செய்தால்தான் அது கிடைக்குமென்பதை அறிவான். இவ்விதம் எல்லாரும் வேலை செய்யவேண்டுமென்றிருந்தால் உலகத்தில் வேண்டிய பொருள்கள் நிறைந்து சாப்பாடு கிடைக்காமல் எத்தனையோ பேர் படும் கஷ்டம் நீங்கி அன்புவளர்ந்து மனிதர் மேற்படி ஏறுவதற்குத் தக்கவராவார்கள்.

இப்போது எங்கள் கடமை என்னவென்றால் உலக இயக்கமாயிருக்கிற இதோடு இந்திய தேசத்துப் பொது சனங்கள் எல்லாரையும் அவர்களுக்கு இந்த இயக்கத்தின் முடிவு என்னவென்பதைத் தெரிவித்து மற்ற நாட்டாருடன் சேர்ந்து செல்ல வேண்டுவதே ...இதற்கு அரசாங்க உதவி வேண்டுமென்றிருப்பது சரியல்ல. அல்லது அரசாங்கம் சீர்திருத்தம் அடையட்டும் என்றும் இருக்க வேண்டியதுமில்லை. உலகம் நடக்கிறது வேலையினால் வேலையாளரெல்லாம் நாங்களாயிருக்கும்போது மற்றவர்கள் கையில் வல்லமை தங்கியிருக்கிறது என்று சொல்வது விபரீத எண்ணம். ஒவ்வொருவரிலும் தெய்வத் தன்மை இருக்கிறது. ஆனால் இது மனிதர் ஏற்படுத்திய சட்டங்கள் காரணமாக ஒருவனிடம் இருக்கும் தெய்வத் தன்மை மற்றொருவனிடம் உள்ள தெய்வத் தன்மையோடு சேராது பிரிக்கப்பட்டிருக்கிறது. இதைச் சீர்ப்படுத்துவதற்குக் கூட்டுத் தொழிலே ஏற்ற கருவி. தூரத்திலிருக்கும் இக்காட்சியை எல்லாரும் உணர்ந்து கண்டு இதை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி அன்பின் மூலம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உயர்ந்த பதவிக்குத் தமது தேசத்தைக் கொண்டுபோக வேண்டியதே முக்கியம்.



(6) ஸ்ரீமத் வால்மீகி

## இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | |
|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 ,, | |
| ஆரணியகாண்டம் | 254 ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 ,, | |
| யுத்தகாண்டம் | 702 ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | ரூ. 2 4 0 |

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை



லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4. வெளிநாடுகளுக்கு ரூபாய் 6.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனம். (7)

## யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்

(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ளுலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்ளீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

\ 88992

(1). இண்டஸ்டிரியல் & புரூடன்ஷியல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்
இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)
Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹுகும் சந்த ஸரூப் சந்த K. T.
வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
மோடிலால் C ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.
லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 2,21592. |
| வசூலிக்கப்படாத மூலதனம் | ரூ. 16,25009. |

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.